
இலங்கைத் தமிழ்ச் சுடர்மணிகள் 6



# சி.வை. தாமோதரம்பிள்ளை

RC
4.811.
B
A

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University ... Library
26 JUL 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தமிழ்ச் சுடர் மணிகள் வரிசை – 06

# சி.வை.தாமோதரம்பிள்ளை

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

649013

University of Peradeniya
26 JUL 2011
Library

குமரன் புத்தக இல்லம்

கொழும்பு – சென்னை

2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

649013

வெளியீட்டு எண் : 272

**சி.வை.தாமோதரம்பிள்ளை**

– கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதியது.

பதிப்புரிமை © 2007 கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

குமரன் புத்தக இல்லத்தினால் வெளியிடப்பட்டது
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12, தொ.பே. 2421388, மி. அஞ்சல் : kumbh@sltnet.lk
– 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலணி, வடபழனி சென்னை – 600 026

குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது
–361, 1/2 டாம் வீதி, கொழும்பு–12

**C.Y. Thamotharampillai**

By Dr. Mannonmani Shanmugadas

Copyright © 2007 by Dr. Mannonmani Shanmugadas

*Published by* **Kumaran Book House**
- 361,1/2 Dam Street, Colombo -12,Tel. - 2421388, E.mail : kumbh@sltnet.lk
- 3 Meigai Vinayagar Street, Kumaran Colony, Vadapalani, Chennai - 600 026

*Printed by* **Kumaran Press (Pvt) Ltd.**
- 361,1/2 Dam Street, Colombo -12

**ISBN 978 - 955 - 659 - 088 - 9**

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.வை. தாமோதரம்பிள்ளை
12.09.1832 – 01.01.1900

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. வாழ்க்கைப் பின்னணி 05

2. இருமொழிப்புலமை 09

3. தமிழ் நாட்டில் சி.வை.தா. 12

4. பதிப்புத் தொண்டு 20

5. சொந்த வாழ்வு 26

6. இலக்கிய உணர்வு 32

7. மூலப்பாடத் திறனாய்வு 35

8. தமிழ்மொழி வளர்ச்சிக்கு சி.வை.தா.வின் பங்கு 40

9. இறுதிக்காலம் 45

பின்னிணைப்புகள்

(i) சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்பித்த நூல்கள் 48

(ii) சி.வை. தாமோதரம்பிள்ளை இயற்றிய நூல்கள் 49

(iii) நூல் விற்பனைத் தொடர்பான சி.வை.தா.வின் விளம்பரம் 50

மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள் 51



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# வாழ்க்கைப் பின்னணி

ஏடு எடுக்கும்போது ஓரஞ் சொரிகிறது. கட்டு அவிழ்க்கும் போது இதழ் முரிகிறது. ஒற்றை புரட்டும்போது துண்டு துண்டாய்ப் பறக்கிறது. இனி எழுத்துக்களோ என்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து உழுது கிடக்கின்றது.

இவ்வாக்கியங்கள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே ஈழத்துத் தமிழறிஞர் ஒருவரது வாயிற் பிறந்த வார்த்தைகளாகும். பழந் தமிழ் நூல்களைத் தேடித் திரிந்த அவ்வறிஞர் தாம் கண்ட காட்சியை நேரடியாக வருணித்துக் கூறும் போது, தம்மையறியாமலேயே அந்நூல்களுக்கேற்பட்ட பாதுகாப்பற்ற தன்மையினையும் கூறிச் சென்றுள்ளார். அதே சமயம், பழைய நூல்கள் இத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு ஏதோ காரணமிருக்க வேண்டுமென்று எம்மைச் சிந்திக்கவும் வைத்துள்ளார். இவ்வாறு சிந்திக்கவைத்தவர் தமிழறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளை ஆவார்.

அவரின் மனங் கனிந்த வாக்கியங்கள் ஈழத்தில் அக்காலத்தே நிலவிய இலக்கியப் பின்னணியை மட்டுமன்றிச் சமுதாயப் பின்னணியையும் கல்விப் பின்னணியையும் விளக்கி நிற்கின்றன. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்தமிழறிஞர் சி.வை.தாமோதரம்பிள்ளை (இனி வருமிடங்களில் சி.வை.தா. எனக் குறிப்பிடப்படுவார்) அவர்களின் வரலாற்றை அறிவதற்கும் இவ்வாசகங்கள் எம்மைத் தூண்டுகின்றன. பொதுவாகத் தென்னகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களும் ஈழத்திலும் ஏற்படுவது வரலாறு காட்டும் உண்மையாகும். இதனாற் குறிப்பிட்ட சில காலப் பகுதிகளில் இத்தகைய மாற்றங்களாலே ஈழத்தில் பல விளைவுகள் ஏற்பட்டதை நாம் உணரக்கூடிய வகையிலே தமது வாழ்க்கையை நடத்திய சி.வை.தா.வினது வரலாறு, ஈழத்து இலக்கியப் பின்னணியைச் சிறப்பாக, 19ஆம் நூற்றாண்டினிறுதிப் பகுதியினது பின்னணியை அறிவதற்கு எமக்குப் பெரிதும் உதவுகின்றது.

## ஆங்கிலக் கல்வியின் செல்வாக்கு

சென்ற நூற்றாண்டிற் கல்வித்துறைகளிற் பல மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இக்காலத்திற் பிரித்தானியர் ஆங்கிலக் கல்வியை ஈழநாட்டிலே பரப்பத் தொடங்கினர். கிறிஸ்தவ சமயத்திற்கு மக்களைத் திருப்புவதற்கும் கல்வியறிவுள்ள கிறிஸ்தவ மக்கள் சமூகத்தை உண்டாக்குவதற்கும் கல்வி இக்காலத்தில் ஒரு கருவியாகப் பயன்பட்டது. கிறிஸ்தவ மதப் பிரசாரகர்கள் சுதேச மதங்களைத் தகர்க்கும் ஓர் உபாயமாகவே கல்வியைப் பெரிதும் கையாண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதிப் பகுதியில் ஈழத்திலிருந்த சூழ்நிலையும் இத்தகைய கல்வியின் பரம்பலுக்கு ஏற்றதாகவே இருந்ததெனலாம். புதிய கல்வி, மாணவர்களுக்குப் பரந்த அறிவினை அளிக்கக் கூடியதாக அமைந்தது. இதனாற் பழைய திண்ணைப் பள்ளிக்கூட முறை மாறி ஆங்கிலக் கல்வியைப் பரப்பும் பாடசாலைகள் தோன்றி வளரத் தொடங்கின. இப்பாடசாலைகளில் ஆங்கிலக் கல்விக்கே முதலிடம் அளிக்கப்பட்டமையால், தமிழ்க் கல்வி சற்றுத் தாழ்நிலையடையத் தொடங்கியது. பள்ளிக்கூடங்களில் புகுந்த ஆங்கிலக் கல்வியினால் பண்பாட்டு மரபிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. பிறமதத்தின் போதனைகளும் மரபான பழக்க வழக்கங்களை மாற்றியமைக்கத் தொடங்கின. ஆங்கிலக் கல்வியின் பயனால் தமிழ் இலக்கிய இலக்கணந் தவிர்ந்த வேறு பல பாடங்களையும் கற்பதற்கு வாய்ப்பேற்பட்டது. பூதநூல், வேதிநூல், தத்துவம் என்பன பற்றிய அறிவு வளரத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களது ஒத்துழைப்பின்றித் தமது ஆட்சியை நிலைநிறுத்த முடியாதென்பதை நன்குணர்ந்த ஆங்கிலேயர் சமுதாயமாற்றத்தை ஏற்படுத்த முயன்றனர். சுதேசிகளின் சமய அடித்தளமான குருகுலக் கல்வியை மாற்றியமைப்பதன் மூலம் பண்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்த முயன்றனர். தமது வர்த்தக நிறுவனங்களில் வேலை செய்வதற்கும் வேண்டிய பணியாளர் களைப் பெறுவதற்கும் புதிய கல்விமுறை இச்சூழ்நிலையில் அவசியமாக இருந்தது. இதனால் ஈழத்தில் வெஸ்லியன் மிஷன் (1814), அமெரிக்கன் மிஷன் (1816), சேர்ச்மிஷன் (1818) முதலிய சங்கங்கள் தோன்றி வளரத் தொடங்கின. சமயத் தொண்டின் அடிப்படையில் அவை கல்வித் தொண்டினை ஆரம்பித்தன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இத்தகைய சூழ் நிலைகளாலே தமிழ்மொழி சில புதிய சக்திகளாற் புதுமையும் வளமும் பெற்றது. மேலைநாட்டு இலக்கியங்களிலே நம்மவர் களும் ஈடுபட்டு அவ்வழிகளினடிப்படையில் தமது இலக்கிய முயற்சிகளையும் ஆரம்பித்தனர். புதுமை மோகத்திலே தமது தாய்மொழியைப் புறக்கணித்து ஆங்கில மொழியைப் பேணி வளர்க்கவும் தொடங்கினர். மரபு மரபாக வளர்ந்து வந்த தமது பண்பாட்டு வளர்ச்சியைத் தடைசெய்யும் வகையிலே தமது வாழ்வினை நடத்தவும் முற்பட்டனர். இந்நிலையில் ஒரு சிலர் இத்தகையவர்களுக்கு விதிவிலக்காய் அமைந்து தமிழ் மொழி யைப் பேணித் தமிழ் இலக்கியங்களைப் போற்றிப் பாதுகாக்கும் முயற்சிகளில் முழுவாழ் நாட்களையும் செலவிட முன் வந்தனர். அவ்வாறு முன்வந்த ஈழத்தவர்களுள் முக்கியமானவராக சி.வை.தா. இடம்பெறுகிறார்.

அக்காலத்தில் சமய நூல்களை மட்டுமன்றித் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களையும் பதிப்பித்துத் தமிழ்மொழி வளர்ச்சியைத் தூண்டிய நாவலரது பணி பின்வந்தோரது மனத்தையும் கவர்வதாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ பின்னணி

சி.வை.தா.வினது பெற்றோர்கள் கிறிஸ்தவர்களாக இருந்தமையால் கிறிஸ்தவராகவே இவரது இளமைக் கால வாழ்க்கை ஆரம்பமாகியது. பிள்ளை அவர்களின் தந்தை வைரவநாதரவர்கள் யாழ்ப்பாணத்திற் சிறுப்பிட்டி எனும் கிராமத்தில் வாழ்ந்த குருநாதரவர்களின் புதல்வராவர். குருநாதரவர்களது குடும்பம் சைவக் குடும்பமாக இருந்த போதும், அதிலே தோன்றிய வைரவநாதரவர்கள் வட்டுக்கோட்டைச் செமினறியிலே கல்வி பயின்றபோது கிறிஸ்தவராக மாறினார்.

> வைரவநாதரவர்கள் வட்டுக்கோட்டை செமினரியிலே பயின்றபோது, 1825 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி கிறிஸ்தவ மதத்தினைத் தழுவினார். அமெரிக்க இந்தியரிடையே கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முற்பட்டுப் பிரபல்யம் அடைந்த சைரஸ் கிங்ஸ்பரி பாதிரியாரின் பெயர் வைரவநாதரவர்களுக்கு வழங்கப்பெற்றது. சைரஸ் கிங்ஸ்பரி வைரவநாதரவர்கள் பண்டத்தரிப்பிலிருந்த அமெரிக்க மிஷன் பாடசாலையின் தலைமையாசிரியராக உயர்ந்து, ஓய்வு பெற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கணிதப் பேராசிரியராகத் திகழ்ந்தவரும், தமது புத்திரருமாகிய எட்வேர்ட் அப்புக்குட்டி கிங்ஸ்பரியவர்களுடன் வாழ்ந்து மறைந்தவர். கிங்ஸ்பரி அமெரிக்க மிஷன் பிரசங்கியாராகவும் பணி புரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது மனைவியர் பெருந்தேவியார் உடுவில் மகளிர் கலாசாலையில் பயின்றபோது, 1830 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி கிறிஸ்தவ மதத்தை தழுவினர். இவர் மேரி டேற்றன் (Mary Dayton) என்னும் கிறிஸ்தவப் பெயரைப் பெற்றார். இவர்களிருவரையும் தம்பதிகளாக்கிய பெருமை அமெரிக்க மிஷனைச் சார்ந்தவர்களுக்குண்டு[1].

என பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

இத்தம்பதியினரின் மூத்த புதல்வராக சி.வை.தாமோதரம் பிள்ளை என அழைக்கப்பட்ட சார்ள்ஸ் வின்ஸ்லோ தாமோதரம் அவர்கள் 1832 ஆம் ஆண்டு செப்டம்பர் 12ஆம் திகதி பிறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# இருமொழிப்புலமை

## தமிழ்மொழிப் புலமை

தந்தையார் வைரவநாத பிள்ளையவர்களோ தமிழ்க் கல்வியை நன்கு கற்றுத் தேர்ந்த பண்டிதர். ஆசிரியராகவும் வாழ்ந்தவர். இதனால் தந்தையிடமே தமிழ் நூல்களைக் கற்கக்கூடிய வாய்ப்புப் பிள்ளையவர்களுக்கிருந்தது. வாக்குண்டாம், நன்னெறி, மூதுரை முதலிய நீதி நூல்களையும் சிறுவயதிலே கற்றுத் தமிழார்வம் கொண்டவராக வளரத் தொடங்கினார்.

மேலும் தமிழை ஆழமாகக் கற்கவேண்டும் என்னும் ஆசையால் அக்காலத்துச் சிறந்து விளங்கிய வித்துவான்களில் ஒருவரான முத்துக்குமார கவிராயரை அணுகி நைடதம், இராமாயணம், பாரதம், கந்தபுராணம் போன்ற தமிழ் இலக்கியங் களைப் பொருள் கேட்டுப் படித்தார். முத்துக்குமார கவிராயரும் தம்மிடம் வந்த மாணவனின் அறிவுத்திறனை உணர்ந்து கல்வி புகட்டினார். இதனால் அவரே சி.வை.தா.வின் பிரதம ஆசிரிய ராகும் பேறுபெற்றார்.

## உயர்கல்வி

தமிழ்க் கல்வி கற்ற சி.வை.தா.வுக்கு அக்காலச் சூழ்நிலைக் கேற்ற கல்வியாக இருந்த ஆங்கிலக் கல்வியையும் கற்க வேண்டு மென்ற விருப்பமேற்பட்டதில் ஐயமில்லை. அக்காலச் சூழ் நிலையில் ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பதற்கெனப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டிருந்தன. கல்வித்துறையிலே தமிழ்மொழிக்கு மட்டுமன்றி மற்றொரு மொழியான ஆங்கிலத் துக்கும் பங்களிக்கப்பட்டது. தமிழ்க் கல்வியைக் கற்பதைவிட ஆங்கிலக் கல்வியைக் கற்பதனால் உத்தியோக வாய்ப்பும் சமுதாய மதிப்பும் ஏற்படலாயிற்று. எனவே அக்காலத்தில் தமிழ் மக்கள் யாவரும் அதனையே நாடி ஊக்கத்துடன் கற்கத் தொடங் கினர். சி.வை.தா.வும் யாழ்ப்பாணத்துப் பேரூராய் விளங்கிய தெல்லிப்பழையில் நிறுவப்பட்டிருந்த அமெரிக்கன் மிஷன் கலாசாலையில் ஆங்கில ஆரம்பக் கல்வியைக் கற்க ஆரம்பித்தார். பின்னர்தான் உயர்தரக் கல்வியைக் கற்கத் தகுந்த கலாசாலையாக வட்டுக்கோட்டைக் கலாசாலையை நாடினார். அக்காலத்தில் இக்கல்லூரியின் புகழ் பெரிதும் பரவியிருந்தது.

> இக்கலாசாலையில் கணித சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம், இரசாயன சாஸ்திரம், பூகற்பசாஸ்திரம், இலக்கண இலக்கியம் முதலிய பலதிறப்பட்ட உயர்தர வித்தைகள் தக்கவாசிரியர்களால் நன்கு கற்பிக்கப்பட்டன[2].

சி.வை.தா.1844 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தனது பன்னிரண்டாம் வயதில் இக்கல்லூரியிற் சேர்ந்தார். தமிழறி வோடு நவீன அறிவியலறிவையும் அவர் பெற்றுக் கொள்வதற்கு இக்கலாசாலையில் அவர் கல்வி பயின்றமையே காரண மெனலாம். இதனை அவருக்குக் கற்பித்த ஆசிரியர்களான சீ.டீமில்ஸ், ஆசிரியர் நெவினஸ், ஆசிரியர் லைமன், ஆசிரியர் நயில், ஆசிரியர் பிறைற் கென்றிச், ஆசிரியர் காறல், வித்துவான் கதிரைவேற்பிள்ளை முதலியோரும் உணர்த்தினர்.

சி.வை.தா.அக்காலத்திலேயே விடயங்களை நுணுகிச் சிந்திக்கும் ஆற்றலுடையவராகவும், தெளிவற்ற விடயங்களை உடனுக்குடன் தெளிவுக்குட்படுத்த விரும்புபவராகவும் விளங்கினார். காலத்தை வீணாக்காமல் வேலையிற் கருத்தாக இருக்கும் குணமுடையவராக ஆசிரியர்களாற் புகழப்பட்டார். தத்துவசாஸ்திரமும் ஆங்கிலமும் வானசாஸ்திரமும் கற்றுப் பல பரிசுகள் பெற்ற சி.வை.தா.வினது தமிழ்ப்புலமை அவருக்குப் பண்டிதரென்னும் பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது. கலாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு நல்ல நண்பர்களையும் தேடிக் கொடுத்தது. அத்தகைய நண்பர்களுள் வேலுப்பிள்ளையென்பவர் பிள்ளையவர்களது இறுதிக்காலம் வரை இனிய நண்பராகவிருந்தார்.

இத்தகைய நட்பு சி.வை.தா. தென்னகத்திற் சுமுகமாக வாழ்வதற்குப் பல சந்தர்ப்பங்களில் துணை செய்தது. நல்ல குடும்ப நண்பராகவிருந்த சி.வை.தா.வுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்தவர் வேலுப்பிள்ளை. சி.வை.தா. நோயாளி யாகவிருந்த காலத்திலும் இறந்த காலத்திலும் அவரது குடும்பத் தவரோடு கூடவிருந்து தம்மாலாக வேண்டிய உதவிகள் யாவற்றையும் செய்து தமது நண்பருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை முழுமனத்தோடு நிறைவேற்றியவர். இதனால் சி.வை.தா.வும் தமது மரணசாசனத்தில் இவரை முக்கிய காரியகாரராக நியமித்துத் தமது ஆஸ்தி முழுவதையுமே இவரது பராமரிப்பில் விட்டு இறந்தார். இத்தகைய நண்பரோடு ஒரே கலாசாலையிற் பயின்று தமது இருபதாவது வயதில் அக் கல்வியை முடித்தபின் சி.வை.தா. வை யாழ்ப்பாணத்துக் கோப்பாய்ப் போதனா வித்தியாசாலை ஆசிரியர்களுள் ஒருவராகக் காலம் மாற்றியது. இவரது முதலுத்தியோகமும் இதுவாக அமைந்தது.

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3
# தமிழ் நாட்டில் சி.வை.தா.


## நாவலரின் செல்வாக்கு

அக்காலப் பகுதியில் தென்னகத்தில் ஈழத்தைப் பற்றிய செய்திகள் வெகுவாகப் பரவியிருந்தன. சி.வை.தா.வினது காலத்துக்குச் சிறிது முன்பாக நாவலர் தென்னகத்திலே ஈழத்தின் பெருமையினை நிறுவியிருந்தார்.

> நாவலர் பார்சிவல் பாதிரியாரோடு சென்னை பட்டணம் சேர்ந்தபோது, அங்குள்ள மிஷனரிமார் யாழ்ப்பாணத்திலே தமிழ்க் கல்வி குறைவானதென்றும் செந்தமிழ் பேசுவோர் அரிய ரென்றும் யாழ்ப்பாணத் தமிழ்ப் பண்டிதராலே திருத்தப்பட்ட பைபிள் தமிழகத்துப் பண்டிதர் முன்னிலையில் வாசிக்கப்பட்டு அவர்கள் பிழையில்லையென்றும், வசனநடை நன்றாயிருக்கிற தென்றும் சொல்வார்களாயின் அச்சிற் பதிப்பிக்கலாமென்றும் நிபந்தனையிட்டனர். இதற்கு நாவலரவர்கள் இணங்கவே அவர் காலத்தில் சென்னையில் சிறந்த வித்துவானாக இருந்த மகாலிங்க ஐயரிடம் மொழிபெயர்ப்புப் பார்வைக்கு ஒப்படைக் கப்பட்டது. அவர் பைபிள் முழுவதையும் படித்து அதிற் பிழையில்லையென்றும் வசனநடை தெளிவாகச் சிறப்புற அமைந்திருக்கிறதென்றும் யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்றும் பாராட்டினார். இந்த அரங்கேற்றத்தின் மூலம் ஈழத்துத் தமிழருக்குத் தமிழகத்தில் மதிப்பேற்பட்டது. யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்ற பெயரும் எங்கும் பரவியது.[3]

எனினும் சு. வித்தியானந்தனின் கூற்று நாவலருக்குப் பின் வந்த சி.வை.தா.வுக்கும் அவர்காலச் சூழலுக்கும் பொருந்துவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுக நாவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்றாகும். ஈழநாட்டுக்குத் தமிழகத்தைக் கடமைப் படுத்தியவர் களுள் நாவலர் முன்வந்தவராகவும் சி.வை.தா. அவர் வழி வந்தவராகவும் விளங்குகின்றார்.

## பத்திரிகை ஆசிரியர்


> சைவ மகத்துவம் என்னும் உரைநடை நூலை இயற்றிய தாமோதரம்பிள்ளை என்னும் இலங்கைப் புலவரையும் இங்கே குறிப்பிடவேண்டும். தமிழ் நாட்டில் இலக்கணப்பயிற்சி குன்றி விடலாகாது என்று எண்ணித் தொல்காப்பியம், இறையனாரகப் பொருளுரை, வீரசோழியம், இலக்கண விளக்கம் என்னும் நூல்களை இவர் பதிப்பித்திருக்கிறார்[4].

எனப் பிற்காலத்தவர் பாராட்டுவதற்கு இடம் ஏற்படக் காரணம் சி.வை.தா.வினது தமிழார்வமேயெனலாம். இத்தகைய ஆர்வமுந் திறமையுந்தான் அவரைத் தென்னகத்திலே தினவர்த்த மானி எனனும் பத்திரிகையின் ஆசிரியராக்கின. நாவலரது பெருமையைத் தென்னகத்திற்கு அறிமுகம் செய்துவைத்த பேர்சிவல் துரையவர்களே, சி.வை.தா. வையும் தினவர்த்தமானி ஆசிரியராக்கித் தென்னகத்திற்கு அறிமுகம் செய்து வைத்தார். அக்காலத்திலே தமிழ்ப் பத்திரிகைகள் மிகக் குறைவாயிருந்த மையால், இப்பத்திரிகை மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது; தமிழ்ப் பத்திரிகையின் வளர்ச்சிக்கும் காரணமாயிற்று. அதே வேளையில் பத்திரிகையாசிரியராக மட்டுமன்றி ஆங்கிலேயருக்குச் சி.வை.தா. தமிழ் கற்பித்தும் வந்தார். சிறந்த உத்தியோகத்தர் களாயிருந்த பேர்னல் பண்டிதர், சேர் உவால்ற்றர் எலியற், லஷ்சிங்டன் துரை முதலானோர் இவரிடத்திலே கல்வி கற்றனர்.

## பட்டப்படிப்பு

சி.வை.தா.வினது இத்தகைய தன்மை அவரது புகழை மேலும் தென்னகத்திலே பரவச் செய்தது. பிரபுக்களது நட்பும் பெருமதிப்பும் கிட்டின. இவர் திறமை சென்னை அரசாங்கத்தின ருக்கும் எட்டி, சென்னை இராசதானிக் கல்லூரியிலே தமிழ்ப் பண்டிதர் பதவியையும் பெற்றுக் கொடுத்தது. இயற்கையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேர்சிவல் பாதிரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழார்வமே இவரது மேற்படிப்புக்கும் உதவியது. இதுவே சென்னைச் சர்வகலாசாலை மாணவனாகிய 1757 இல் முதன் முதல் நடத்தப்பட்ட பிரவேசப் பரீட்சையில் சித்தி பெறவும் வைத்தது. கலாசாலையிலே தமது ஆசிரியராகிய விஸ்வநாத பிள்ளையோடு பி.ஏ.பரீட்சையை எழுதிச் சித்தியும் பெற்றார். ஈழநாட்டறிஞர் களுக்கு இவ்வழியிலே சி.வை.தா.முதல்வராக விளங்குகிறார். சென்னை சர்வகலாசாலையின் தவப்புதல்வனாக மட்டுமன்றி, ஈழநாட்டிலிருந்து தென்னகம் சென்று பி.ஏ.பரீட்சையில் சித்தி பெற்ற முதல் மாணவனாகவும் வரலாற்றுப் புகழ் பெற்றார். இப்பரீட்சையில் அவர் பெற்ற வெற்றி அவர் வாழ்வையே திருப்பியதெனலாம். சி.வை.தா. தாம் கடமையாற்றும் இடங்களிலெல்லாம் பெரும் புகழ் பெற்றார்.

> அக்காலத்தில் வித்தியாதரிசிகராய் இருந்த கர்னல் ஏ.சி.பியோர்ஸ் துரையவர்கள் அவ்வித்தியாசாலையைத் தரிசித்தபோது, அவரால் அக்கலாசாலைக்கு விளைந்த நன்மைகளைக் கண்ணுற்று, அவரை வியந்து கொண்டாடியது மட்டுமன்றிக் கலாசாலையைக் குறித்துத் தாம் எழுதிய அறிக்கைப் பத்திரத்தில் அவரைப் பலவாறு புகழ்ந்தும் எழுதியிருக்கின்றார்.[5]

தாம் பெற்ற பட்டத்துக்கேற்ற உத்தியோகத்தை சி.வை.தா. தேடிச் செல்லவேண்டிய நிலை ஏற்படவில்லை. கடமையாற்றும் இடங்களில் அவர் தன்மை கண்ட பிறர் அவருக்கேற்ற பதவிகளைத் தாமே வழங்க முன் வந்தனர். அவரிடம் தமிழ் கற்ற லஷிங்டன்துரை சென்னையிலுள்ள வரவுசெலவுக் கணக்குச் சாலையில் கணக்காய்வாளர் பதவியைச் சி.வை.தா.வுக்கு பெற்றுக் கொடுத்தார். அத்துறையில் அவர் காட்டிய திறமையால் விசாரணைக் கர்த்தர் பதவியையும் விரைவிற் பெற்றார்.

## பண்டைத் தமிழ் நூல்களில் ஆர்வம்

இளமைப் பருவந் தொட்டே தமிழ்மொழியிற் பயிற்சியும் திறமையும் அபிமானமும் உடையவராக இருந்து, தமக்குக் கிடைத்த ஓய்வு நேரங்களை நல்ல வழியொன்றிலே பயன் படுத்தினார். அவ்வழியில் அவர் சென்றமையே அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.வை.தா. கல்விகற்ற சென்னைப் பல்கலைக்கழகத்தின்
அன்றையத் தோற்றம்



சி.வை.தா. தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றிய
சென்னை இராசதானிக் கல்லூரியின் தற்போதையத் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தின் பின்னும் மகத்தான பெருமையை அளித்தது. ஓய்வு நேரங்களிற் பண்டைத் தமிழ் நூல்களைத் தேடிக் கற்பதிலும் அவற்றைப் பரிசோதனை செய்வதிலும் சி.வை.தா.வுக்கு ஈடுபாடு உண்டாயிற்று.

19ஆம் நூற்றாண்டில் நிலவிய சூழலும் சி.வை.தா.விற்குச் சாதகமாக அமைந்திருந்ததெனலாம். 18 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலே சாமிநாத தேசிகர், சிவஞானசுவாமிகள் காலம் வரை ஒரு நூற்றாண்டுக் காலமாகச் சங்க நூல்களையும், பௌத்த சமண காவியங்களையும் கற்றல் கூடாது என்ற வழக்கமே நிலவி வந்தது. இவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இக் கொள்கையை ஆதரித்தது மட்டுமின்றிப் பின்பற்றியும் வந்தார்கள். சைவ மடங்களும் இவர்களுடைய கொள்கையை ஆதரித்துச் சங்க நூல்களை மாணவர்களுக்குக் கற்பித்தலை நிறுத்தி இருந்தன. இதனால் 19ஆம் நூற்றாண்டிலே தமிழ் இலக்கியத்திலே மாமேதை என்றும் தலைசிறந்த தமிழாசிரியர் என்றும் புகழ் பெற்றிருந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை கூட இந்நூல்களைத் தமது மாணாக்கர்களுக்குக் கற்பியாதிருந்தார். சங்க நூல்களைப் பற்றியும் பௌத்த சமண காவியங்களைப் பற்றியும் பிறர் அறிவதற்கேற்ற சூழலே இல்லை எனலாம்.

> அச்சமயம் அரியலூரிலிருந்த சேலம் இராமசாமி முதலியார் என்பவர் கும்பகோணத்திற்கு முன்சீபாக மாற்றப் பெற்று வந்தார். அவரிடம் என் நல்லூழ் என்னைக் கொண்டு போய் விட்டது. அவருடைய நட்பினால் என் வாழ்க்கையில் ஒரு புதுத்துறை தோன்றியது. தமிழிலக்கியத்தின் விரிவை அறிய முடிந்தது. அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, கோவை முதலிய பிரபந்தங்களிலும், புராணங்களிலும் தமிழின் பாங்கு கண்டு மகிழ்வதோடு நில்லாமற் பழைமையும் பெருமதிப்புமுடைய தண்டமிழ் நூல்களிற் பொதிந்து கிடக்கும் இன்றமிழியற்கை இன்பத்தை மாந்தி நான் மகிழ்வதோடு பிறருமறிந்து இன்புறச் செய்யும் பேறும் எனக்கு வாய்த்தது.[6]

என சி.வை.தா. ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். சேலம் இராமசாமி ஐயர் சங்க இலக்கியங்களைப் பிறரும் கற்கவேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நோக்கத்துடன் செயலாற்றாதபோதும் ஒரு தற்செயல் நிகழ்ச்சியான இந்நிகழ்ச்சி தமிழிலக்கியத்தின் பழைய நூல்கள் வாழ்வதற்கு வழிவகுத்ததெனலாம். இதேசமயம் இலக்கிய நூல்களைக் கற்றல் கூடாது என்ற இயக்கத்தினாலே தமிழ் நூல்கள் மறக்கப்படுவதற்கும் அழிந்து போவதற்கும் இடமுண்டாயிற்று.

பதிப்புலகமேதையென்று பலராலும் போற்றப்படுகின்ற உ.வே.சாமிநாதையரை அத்திசையிலே சேலம் இராமசாமி ஐயர் திருப்பிவிட்டார், ஆனால் சி.வை.தா.வையோ அவரது சொந்த ஆர்வமே இப்பதிப்புத்துறையில் ஈடுபடத் தூண்டிற்றெனலாம். அவ்வார்வத்தினைச் சி.வை.தா. செயற்படுத்துவதற்கு அக்காலச் சூழ்நிலையும் வாய்ப்பாக இருந்தது.

கடல்கோள்களாலும் பிறகாரணங்களாலும் பல தமிழ் நூல்கள் அழிந்தொழிய, எஞ்சி நின்றவையும் அந்நாளில் செல்துளைத்த துளையன்றி மெய்ப்புள்ளி விரவாத சென்னாளேடு களாய் ஓரஞ்சிதைந்தும் இதழ் ஒடிந்தும் சீரழிந்து கெட்டுச் சிதைந்து நிரைமாறிப் பேரழிந்து பூஞ்சிபிடித்த பிடியாகி முன்பின் முரணி முழுவதும் புழுவுழுது கட்டை நடுமுறித்துக் கட்டுவிட்டுச்சிதறி மூலைக்கு மூலை மடங்கி முடங்கி எடுப்பாரும், அடுப்பாருமின்றி மண்ணுக்கிரையாகிக் கிடந்தன.

இந்நிலையைக் கண்ட சி.வை.தா.அழிந்தொழியும் அந்த நூல்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது பெருங்கடமையென உணர்ந்தார். சிதைந்தவற்றை அச்சிட்டுப் பாதுகாக்கத் தமது வாழ்நாளையே ஈந்தார். நாவலரது வழியிற் சென்று நூல்களைப் பதிப்பிக்கும் முயற்சியில் இறங்கிய சி.வை.தா.தமது இருபதாம் வயதில் 'நீதிநெறி விளக்கத்தை' அச்சிட்டு வெளிப்படுத்தி யமையால் இம்முயற்சி புதிதானதாக இல்லாவிடினும், போதிய அவகாசமில்லாதமையால் சிரமத்தைத் தருவதாயிருந்தது என்பதை உணர்ந்தார். இதனால் நூற்பதிப்பில் நாவலருக்குத் தம்மாலியன்ற உதவிகளை ஆற்றிவந்தார். நாவலர் பரிசோதித்துக் கொடுத்த தொல்காப்பியம் சொல்லதிகாரம் 1868ஆம் ஆண்டு இவரது பெயரில் வெளிவந்தது. நாவலரது மறைவு அவர் மேற் கொண்ட பணியைத் தாம் தொடர வேண்டுமென்ற உறுதியைச் சி.வை.தா.வுக்கு அளித்தது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# பதிப்புத் தொண்டு

## பதிப்பு முயற்சிகள்

பதிப்புப் பணியிலே அவரை அழைத்துச் சென்ற நாவலர் அவர்களது மறைவுக்குப் பின்னர் அதனையே தமது வாழ்நாட் கடமையாக்கி 1881இல் **வீரசோழியத்தையும்**, 1883 இல் **தணிகைப் புராணத்தையும், இறையனாராகப் பொருளையும்**, 1885 இல் **தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும்**, 1887 இல் கலித் தொகையையும், 1889 இல் **இலக்கண விளக்கத்தையும், சூளா மணியையும்**, 1892 இல் நச்சினார்க்கினியரின் **தொல்காப்பியம் சொல்லதிகாரத்தினையும்** வெளியிட்டார்.

இலக்கிய இலக்கண நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட தோடமையாது **கட்டளைக்கலித்துறை, வசனசூளாமணி, சைவ மகத்துவம், ஏழாம் வாசகம், ஆதியாகம கீர்த்தனை. நட்சத்திர மாலை** போன்ற நூல்களைத் தாமே எழுதியும் வெளியிட்டார். பதிப்புத்துறையிலே சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியைச் சி.வை.தா.வினது காலமென்று கொள்ளக் கூடியதாக அவரது வாழ்க்கையிற் பதிப்புத் தொண்டுதான் சிறந்து விளங்குகிறதெனலாம்.

அக்காலத்திலே தமிழ் பற்றிய ஆராய்ச்சிகள் தோன்றி வளரத் தொடங்கின. மேலைநாடுகளில் வழங்கிவரும் நவீன ஆராய்ச்சி முறைகள் தமிழுக்குப் புதியனவாக வந்து சேரத் தொடங்கின. எனினும் இலக்கியங்களை ஆராய்ச்சி செய்வது தமிழருக்குப் புதிய தென்று கூறுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய ஆய்வு முறை

> காவியங்கள் எல்லாம் செய்யுள் நடையில் இருப்பதால் அவைகளுக்குப் பதவுரை, பொழிப்புரை செய்வதும், மேற்கோள் சொல்வதும், அவைகளிலுள்ள அணி அலங்காரங்கள் திணைப் பாகுபாடுகள் முதலியவற்றை விளக்குவதும், கதைப்போக்கைத் தழுவிய வேறு கதைகளையும் உப கதைகளையும் கூறுவதும், பாட்டுக்களுக்கு விசேட அர்த்தம் சொல்லுவதுமே முன் காலத்தில் ஆராய்ச்சியாகக் கருதப்பட்டன.[7]

என ஓர் அறிஞர் அக்காலத்தைக் குறிப்பிடுகின்றார். ஆனால் இத்தகைய ஆய்வுக்கும் மேலான தமிழாய்வுகளை மேற்கொண்டவர் சி.வை.தா. பழைய தமிழாய்வு முறையை விடுத்துப் புதிய முறைகளைப் பின்பற்றித் தமது ஆய்வினைச் செய்ய அவர் முனைந்தார். பழந்தமிழ் நூல்களின் வரலாறு பற்றியும் நூற்பகுப்புப் பற்றியும் தெளிவான கருத்துக்களைப் பெறக்கூடிய ஆய்வுக் கட்டுரைகளாகச் சி.வை.தா.பதிப்புரைகள் அமைந்தன. பதிப்பாசிரியர் ஒருவருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்றான இவ்வாய்வு மனப்பாங்கு சி.வை.தா. பதிப்புப் பணியில் மட்டுமன்றிப் பிற தமிழ்ப் பணிகளிலும் ஈடுபடத் தூண்டியது. சமகாலப் பதிப்பாசிரியர்களும் பின் வந்த பதிப்பாசிரியர்களும் சி.வை.தா. வைச் சிறப்பித்துக் கூறுவதற்குச் சி.வை.தாவுக்கிருந்த தமிழாய்வு மனப்பாங்கும் ஈடுபாடுமே முக்கிய காரணங்களாக விளங்கினவெனலாம்.

## புதிய பணி

பதிப்புத் தொண்டிலீடுபட்ட சி.வை.தா. குடந்தையிலிருந்து கலித்தொகையைப் பரிசோதித்துவரும் நாளிற் புதுக்கோட்டைச் சமஸ்தான நீதிபதிகளுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். தமது உபகாரச் சம்பளத்துக்கு மேலதிகமாகத் தாம் சம்பாதிக்கின்ற பொருளனைத்தையும் தமிழ் நூற்பதிப்புக்கே செலவிட வேண்டுமெனத் தீர்மானித்து அவ்வுத்தியோகத்தை ஏற்றுக்கொண்டார். நான்கு வருடங்களாக இப்பதவியை வகித்து வந்தார். 1889ஆம் ஆண்டு அவரது மூத்தமகன் இறந்தபோது புத்திரசோகம் அவரைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் வருத்தினமையாலும் காலிலே தோன்றிய சிறு நோயாலும் 1890 இல் உத்தியோகத்தை விடுத்தார். அக்கால முதல் அவரது தேகநலமும் சற்றுக் குன்றத் தொடங்கியது. இதனாற் சென்னைக்குச் சென்று தமது வாழ்நாளைக் கழிக்க எண்ணினார்.

**தமிழ் சம்பந்தமான பணி**

சென்னை சென்று தமிழ் சம்பந்தமான பல விடயங்களில் சி.வை.தா. ஈடுபட்டார். சர்வகலாசாலையாருக்கும் தம்மாலியன்ற உதவி செய்தமையாற் பிரவேசப் பரீட்சைக்குப் பாடமாக ஏற்படுத்த வேண்டியவற்றைத் தெரிந்தெடுக்கும் கடமை இவருக்குப் பல்லாண்டுகளாக ஏற்பட்டது. சென்னைச் சர்வ கலாசாலைத் திராவிட கிரந்த பரிபாலன சபையின் விசேட அங்கத்தவர்களில் ஒருவராக இருந்தது மட்டுமன்றித் தமிழ் மொழியில் ஒரு பேரதிகாரியாயுமிருந்தார். மேற்கூறிய சபையாரின் கூட்டங்களில் தமிழ்மொழி சம்பந்தமாக நடக்கும் எவ்விவகாரங் களிலும் இவரது அபிப்பிராயமே விசேடமாக மதிக்கப்பட்டு வந்தது. சர்வகலாசாலையாரின் தமிழ்ப் பரீட்சகராக இவர் இருந்த காலத்திலே திரு.வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரியாரின் பரீட்சகராகவும் கடமையாற்ற வேண்டியேற்பட்டது. பின்னர் சூரியநாராயணசாஸ்திரியார் தன் பரீட்சகரைப் பற்றிக் குறிப்பிடு வது பிள்ளையவர்களது தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, சாமிநாதையர் மூவரையும் ஓர் இனத்தவர்களெனத் திரு.வி.க.குறிப்பிடுகிறார். தமது 'வாழ்க்கைக் குறிப்புகள்' என்னும் நூலிலே பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுக நாவலர். சுவர் எழுப்பியவர் தாமோதரம்பிள்ளை, கூரைவேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாதையர் என்று வருணிக்கிறார். யாராவது பதிப்புகளை வெளியிடும் போது அவற்றைச் சி.வை.தாமோதரம் பிள்ளையின் நினைவுக்கு அர்ப்பணஞ் செய்யவேண்டுமென்ற கொள்கையுடையவராகத் திரு.வி.க.இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ.வே.சாமிநாதையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னகத்தில், ஏனைய சமகால ஈழத்தவர் போன்று பிள்ளையவர்கள் தமிழ்த்தொண்டில் மட்டும் ஈடுபட்டாரில்லை. அவருக்கு உயர்தர அலுவல்களிலும் அமர்ந்திருக்கும் வாய்ப்பு மேற்பட்டது. இத்தன்மையில் சி.வை.தா. ஏனையவர்களிலிருந்து வேறாகக் கணிக்கப்பட்டதுடன், கண்டனங்களுக்கும் விமர்சனங் களுக்கு முள்ளாகின்றார்.

தேச மத பாஷாபிமானமிக்கவரும், சிவபூசாதுரந்தரும் ஏடுகாத்த பீடுடையாருமாகிய சி.வை.தா.வினது சால்புடைமை கண்ட சென்னை அரசாங்கம் 1875 இல் இராவ்பகதூர் (Rao Bahadur) என்னுங் கண்ணிய பட்டம் நல்கிக் கௌரவித்தது. சி.வை.தா.வின் தென்னக வாழ்வில் ஏற்பட்ட சில பெரியார்களது தொடர்பு அவரது வாழ்க்கையிலும் சில பாதிப்புக்களை ஏற்படுத்தியதெனலாம். முக்கியமாக டாக்டர் உ.வே.சாமிநாதையரது தொடர்பு பதிப்புத்துறையில் ஒரு துரித வளர்ச்சியைச் சி.வை.தா. வினது முயற்சியில் ஏற்படுத்திக் கொடுத்தது. சாமிநாதையர் தமது வரலாற்றைக் கூறும் நூலாகிய 'என்சரித்திரத்தில்' சி.வை.தா.வோடு ஏற்பட்ட முதல் தொடர்பைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> அவர் அடிக்கடி என் வீட்டுக்கு வந்து தமிழ் நூல்கள் விஷய மாகச் சல்லாபம் செய்து பழகலானார். கும்பகோணத்துக்கு அருகேயுள்ள கருப்பூரில் ஜாகை வைத்துக் கொண்டிருந்தார். அவர் வீட்டிற்கு நானும் அடிக்கடி போய்வருவதுண்டு. தாம் பல தமிழ் நூல்களைப் பதிக்க எண்ணியிருப்பதாய்த் தெரிவித்த தோடு திருவாவடுதுறை சென்று சுப்பிரமணிய தேசிகரைத் தரிசிக்க வேண்டுமென்று விரும்பினார். அங்ஙனமே நான் அவரை அழைத்துச் சென்று தேசிகருக்குப் பழக்கம் செய்வித் தேன். மடத்தில் பல ஏட்டுச் சுவடிகள் இருக்கு மென்றும் அவற்றைத் தமது பதிப்புக்கு உபயோகித்துக் கொள்ளலா மென்றும் அவர் கருதினார். தேசிகருடன் செய்த சம்பாஷணை யிலிருந்து அவருடைய கல்வியறிவையும் பெருந்தன்மை யையும் உணர்ந்து கொண்டேன்.[8]

ஆனால் சி.வை.தா. வினது பதிப்புத் தொண்டினைப் பற்றிய சில கருத்து வேறுபாடுகளைச் சாமிநாதையர் கொண்டிருந்தமை அவரது, என் சரித்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசக் கல்வியறிவைப் பெற்ற பிள்ளையவர்கள் வரலாற்றுணர்வு மிக்கவராயிருந்தார். ஒரு மொழிப் பாண்டித்தியம் பெற்ற ஏனையவர்களுக்கு அவர் மீது வெறுப்பும் கூட ஏற்படலாயிற்று. ஆங்கிலக் கல்வியினால் ஏனைய அறிவியற்றுறைகளை அணுகி, அவற்றின் துணைகொண்டு சி.வை.தா.செய்த பதிப்புக்களைப் பிழையெனக் கருதவும் வரன் முறைக் கல்வியாளர் முயன்றனர்.

University of Peradeniya
26 JUL 2011
Library

640613

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

# சொந்த வாழ்வு

### திருமணம்

சி.வை.தா.மும்முறை மணஞ்செய்தவர். தெல்லிப்பழையைச் சேர்ந்த காளிங்கராய முதலியார் வழிவந்தவரும் தம் பள்ளித் தோழராய்க் கல்வி கற்றவருமான வயிரவநாதர் அம்பலவாண பிள்ளையவர்களோடு தமக்குக் கலாசாலையிலே உண்டான நட்பை நிலைபெறச் செய்வதற்காக அவரது சிற்றன்னையாரது வயிற்றிலுதித்த வள்ளியம்மையை மணந்தார். வள்ளியம்மை இரண்டு குழந்தைகளைப் பெற்று நோய்வாய்ப்பட்டு இறக்கவே, அவரது சகோதரியாகிய நாகமுத்தம்மாளை 1860 ஆம் ஆண்டு மணம் புரிந்தார். இத்திருமணத்தின் பேறாய் மக்கள் அறுவர் பிறந்தனர். கனகரத்தினம்பிள்ளை, அமிர்தலிங்கம்பிள்ளை, பொன்னம்மாள், சோமசுந்தரம்பிள்ளை, அழகசுந்தரம், சிவபாக்கியம் என்பவர்களே அவர்களாவர்.

### புத்திர இழப்பு

சி.வை.தா.வின் தந்தையாருக்குப் புத்திரர் எழுவரிருந்தனர். அவர்களுள் பிள்ளையவர்களே மூத்தவராவார். இவரது சிறிய பராயத்திலேயே தந்தையார் இறந்தமையாற் குடும்பக் கடமைகள் யாவற்றையும் நிருவகிக்க வேண்டிய பொறுப்பும் இவருக் கிருந்தது. மனைவியர் ஒருவர் பின் ஒருவராய் உயிர் துறந்தமை சி.வை.தா.வுக்குத் துன்பத்தைத் தந்த போதிலும் பிள்ளைகளால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.வை.தா. வின்
சகோதரரான அப்புக்குட்டி



சி.வை.தா. வின் மனைவியின்
சகோதரியான
ஆச்சிக்குட்டி
இவர் சி.வை.தா.வின்
சகோதரரான
அப்புக்குட்டியின்
மனைவியுமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை மறந்திருந்தார். ஆனால் மகனாகிய அமிர்தலிங்கம் நோயுற்று 1889 இல் இறந்தபோது ஆற்றொணாத் துயரடைந்தார். அக்காலத்தில் உத்தியோகம் தமக்கு அவசியமற்றதென எண்ணி 1890 இல் அதை விட்டு நீங்கினார். தாம் பிறந்த இடமாகிய யாழ்ப்பாணத்தில் இச்சந்தர்ப்பத்திற் சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது தமக்குப் பேராதரவாய் இருப்பாரென்றெண்ணிய புலவர் இறந்தமையாலும், சி.தா.அழகசுந்தரம் சிறு வயதினராக விருந்தமையாலும், குடும்ப காரியங்களை நடத்துவதற்குப் பிள்ளையவர்களுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. இதனால் அவ்வருடத்தில் மூன்றாவது தரம் மணஞ்செய்தார். அதன் பின்னரே முழுமூச்சாகப் பதிப்புத் தொண்டில் இவரால் ஈடுபட முடிந்தது. அம்முயற்சிக்குச் சென்னையே தகுந்த இடமென எண்ணி அங்குச் சென்று வதியத் தொடங்கினார்.

## மகனின் மதமாற்றம்

1893 இல் சி.வை.தா.வினது மனத்துயரினை அதிகரிக்கச் செய்யும் நிகழ்ச்சியாக அவரது புத்திரசிகாமணிகளுள் எஞ்சி நின்ற சி.தா.அழகசுந்தரம் கிறிஸ்தவ மதத்தைத் தழுவியமை அமைந்தது. பிரான்சிஸ் கில்ஸ்பெரி என்ற அழகுசுந்தரம் (1873-1941) ஒரு பி.ஏ.பட்டதாரி. அவரும் ஒரு தமிழறிஞர். சென்னைப் பல்கலைக்கழகம் தொகுத்த பேரகராதியின் தொகுப்புக் குழுவில் துணையாசிரியராக இருந்தவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர்.

பிறப்பினால் சி.வை.தா. கிறிஸ்தவராகச் சிலகாலம் அம் மதத்தைத் தழுவியபோதும் ஏறக்குறையத் தமது இருபத்தெட்டாவது வயதின் பின்னர் சிவபெருமானையே முழுமுதற் கடவுள் என்று துணியும் சைவராக அப்பெருமானை அடைவதற்குரிய மார்க்கங்களாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு விதமான முறைகளில் முதலிரண்டினாலும் இறைவனை வணங்கிச் சமய தீட்சை, விசேடதீட்சை இரண்டும் பெற்றிருந்தார். ஆனால் அழகு சுந்தரமோ கடிதம் மூலம் தந்தைக்குச் சைவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி.வை.தா. வின் மகனான
பிரான்சிஸ் கில்ஸ்பெரி என்ற அழகுசுந்தரம் (1873-1941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் தமக்குத் திருப்தியில்லையென்றும் அதன் காரணமாகத் தாம் கிறிஸ்தவப் பிரவேசம் செய்ய நிச்சயித்திருப்பதாகவும் அறிவித்து அவரை விட்டகன்றார். தாம் பெரிய சைவரென்றும் சிறந்த தமிழ் வித்துவானென்றும் பெயர் பெற்றும் தமது மகன் கிறிஸ்தவரானது தமக்குப் பெருங்குறையெனப் பிள்ளையவர்கள் எண்ணி வருந்தினார்.

சி.வை.தா.வின் இறுதிக்காலத்தில் அவர் தமது மகன் அழக சுந்தரத்தையும் வெறுக்காது அன்பு செய்யும் நிலையைக் காண முடிகின்றது. யாவரேனும் தீங்கிழைப்பினும் அதை அன்றே மறக்கும் சுபாவமுடைய பிள்ளையவர்கள் குணநலத்தை, அவர் வரலாற்றை எழுதிய த.இராஜரத்தினம் பிள்ளையவர்கள் பாராட்டு கின்றார்.

## சைவசமய செல்வாக்கு

நாவலரது சமயப்பணி நாட்டு மக்களைச் சைவசமயத்தைத் தழுவச் செய்தது போன்று பிள்ளையவர்களையும் சைவ சமயத்தைத் தழுவச் செய்தது.

> ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதத்தை மேற்கொண்டிருந்த பிள்ளையவர்கள், பின்னர் சைவத்தை நாடி இறுகிய சமய பக்தியுடையவராகத் தமது அந்திம காலம் வரையும் சிவபூசை மேற்கொண்டதும் நாவலர் பெருமான் போதனையால் என்பது உணரப்படும்[9].

ஈழத்திற் சைவம் தழைக்க நாவலர் பெருமானது பிரசங்கங் களும், கட்டுரைகளும், கண்டனங்களும் பேருதவி புரிந்தன. அக்காலத்தில் வாழ்ந்தவர் பலர் இப்போதனையால் மீண்டும் சைவத்தைத் தழுவினர். அதே போன்றே கிறிஸ்தவராகப் பிறந்து ஏறக்குறைய 28 ஆண்டுகளாக அச்சமயத்தைப் பின்பற்றியிருந்த சி.வை.தா.வும் சைவ சமயத்தைச் சார்ந்தார்.

ஆறுமுகநாவலரது போதனைகள் சி.வை.தா.வின் மத மாற்றத்துக்குக் காரணமாயிருந்தபோதும், அவரது மனவுறுதியே அவரைச் சைவராகப் பிற்காலத்தில் பெருமைப்படவைத்தது எனலாம். தமது சைவத் தொண்டினை வெறும் வடிவிலன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைப்படுத்தவும் இவர் முயன்றமை இதனைத் தெளிவு படுத்துகின்றது. அந்த முயற்சியின் பயனாகவே 1876 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் திகதி ஏழாலையில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை அவரால் நிறுவப்பட்டது. அப் பாடசாலைக்குச் சுன்னாகம் முருகேச பண்டிதரைத் தலைமை யாசிரியராகவும் சுன்னாகம் குமாரசாமிப் புலவரை உதவி ஆசிரியராகவும் நியமித்தார். அவ்வித்தியாசாலையில் ஒவ்வொரு வருட இறுதியிலும் மாணவர்கள் பிரபல வித்துவான்களால் பரீட்சிக்கப்பட்டனர். பரீட்சகர்கள் தாம் நடாத்திய பரீட்சைகளின் முடிவுகளை அறிக்கைகள் மூலம் முகாமைக்காரர்களுக்கு அனுப்பி யதுடன் இலங்கைநேசன் முதலிய பத்திரிகைகளிலும் வெளியிட்டனர்.[10]

இவ்வாறு சி.வை.தா.தொடங்கிய முயற்சி தொடர்ந்து நடைபெறுவதற்கு முடியவில்லை. அவர் உடல்நலவீனத்தால் இவ்வித்தியாசாலையை 1898 ஆம் ஆண்டு மூட நேர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6
# இலக்கிய உணர்வு

தற்கால இலக்கிய விமர்சகர்கள் சி.வை.தா. சொந்தமாக இயற்றிய நூல்கள் குறைவென்றும் அதனால் அவரது புலமைத் திறம் குறைந்ததென்றும் அபிப்பிராயப்படக் கூடும். தமிழில் அநேக சிறந்த நூல்களிருக்கின்றன என்பதை உணர்த்த வேண்டிய கடமையே அக்காலத் தமிழ் மக்களது தலையாய கடன் என்ற கோட்பாட்டினையே சி.வை.தா.கைக்கொண்டு அவற்றைத் திருத்திப் பதிப்பிடத் தொடங்கினார். அவ்வாறு பதிப்பிக்கும் போது சிறப்புக்கவி, துதிக்கவி, சீட்டுக்கவி போன்ற தனிக் கவிதைகளாலே தமது புலமையை வெளிப்படுத்தியுள்ளார்.

ஒரு நாட்டின் இலக்கிய உணர்வினை வளர்க்க வேண்டு மாயின் அந்த நாட்டுப் புராதன இலக்கியங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதவசியம் என்பதை சி.வை.தா. நன்கு உணர்ந்தார். புதிய இலக்கியங்களின் பிறப்புக்கும் வளர்ச்சிக்கும் அப்புராதன இலக்கியங்கள் துணைசெய்ய முடியும் என்பதை அவர் தமது கொள்கையாகக் கொண்டிருந்தாரென்றே கூறலாம். தேசியப் பற்றினையூட்டக் கூடிய பண்டைய இலக்கியப் பாதுகாப்பில் ஈடுபட்ட அவர் தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் எனும் இம்மூன்றும் இல்லாதார் பெருமை ஒரு பெருமையா என்று கூறியுள்ளார்.

> பழைய சுவடிகள் யாவும் சிதிலமாய் ஒன்றொன்றாய் அழிந்து போகின்றன. புது ஏடுகள் சேர்த்து அவற்றை எழுதி வைப்பாரும் இலர். துரைத்தனத்தாருக்கு அதன்மேல் இலட்சியமில்லை. சரஸ்வதியைத் தம்பால் வகிக்கப்பெற்ற வித்துவான்களை அவள் மாமி எட்டியும் பார்க்கின்றாளில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுடையீர்! நுங்கருணை இந்நாட்டவரினால் பின்பு தவம் புரிந்தாலும் ஒருதரம் அழிந்த தமிழ் நூல்களை மீட்டல்அரிது. யானைவாய்ப் பட்ட விளாம்பழத்தைப் பின் இலண்டத்துள் எடுத்து மென்? ஓடன்றோ கிட்டுவது? காலத்தின் வாய்ப்பட்ட ஏடுகளைப் பின் தேடி எடுப்பினும் கம்பையும் நாராசமுந்தான் மீளும்............. சீமான்களே இவ்வாறு இறந்தொழியும் நூல்களுக்குச் சற்றாவது கிருபை பிறக்கவில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்! அயலவன் அழியக் காண்கினும் மனம் தழும்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா? அவள் அழிய நமக்கென்னென்று வாளா இருக்கின்றீர்களா? தேசாபிமானம், மதாபிமானம், பாஷாபிமானமென்று இவையில்லாதார் பெரு மையும் பெருமையா, இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக[11].

என சி.வை.தா. ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார். இத்தகைய அவரது எழுத்துக்கள் அவரது மனவியல்பினைக் காட்டி நிற்கின்றன. சமகாலத்தவரது பதிப்பு முயற்சிகள் சுருங்கிய அளவிலே நடைபெற்ற போதும் சி.வை.தா.தன்னந்தனியாகப் பண்டைத் தமிழ் இலக்கியங்களைத் தமிழ் மக்களுக்குத் தம்மால் பாதுகாத்துத்தர முடியும் என்ற நம்பிக்கையோடு செயலாற்றியவ ரெனலாம்.

பதிப்பு முயற்சியில் சி.வை.தா.வுக்குத் தென்னகத்திலேற் பட்ட இடையூறுகளைப் பற்றிக் குறிப்பிடும்போது வையாபுரிப் பிள்ளையவர்கள் ஏடுகளுக்கு உரியவர்களும் சி.வை.தா.வுக்கு அவற்றைக் கொடுப்பதில் விருப்பமற்றிருந்தனர் எனக் கூறியுள்ளார். சி.வை.தா. தென்னகத்தில் வாழ்ந்த காலத்தில் தமது பதிப்பு முயற்சிகளைச் செய்வதற்கேற்ற சூழ்நிலை சில சமயங்களில் வேறுபட்டபோதும் மனம் தளராமல் அம்முயற்சி யினைத் தொடர்ந்தார். தமது காலத்திலே தமிழ் கற்பிக்கின்ற வர்களைப் பற்றியும், தமிழாய்வில் ஈடுபட்டவர்களைப் பற்றியும் சி.வை.தா. கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். வீரசோழியப் பதிப்புரையிலே தமது காலத்திலிருந்த மொழி வல்லார் பண்பினைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

ஐரோப்பிய பாஷைகள் போல ஒவ்வொரு மொழியிலும் தன் சுயரூபமாகப் பக்குவிட்டு நில்லாது பலவாறு பிரியுந்தன்மை வாய்ப்புணர்ந்து நிற்கும் சமஸ்கிருத தமிழ் வாக்கியங்களை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அவற்றிலுள்ள பதங்களை அர்த்தத்தோடு முன்னர் உணர்ந்தாலன்றிப் பிரித்துப் பயன் கொள்ளுதல் அருமையாதலின், அமரம், நிகண்டு முதலிய முதலே கற்றல் அவசியமென்பது இத்தேச மொழிவல்லார் துணிபு.[12]

இத்தகைய மொழிபற்றிய கருத்துக்களாலே தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளைச் சி.வை.தா. சிந்தித்துச் செயலாற்றினார். தமது சமகாலத்தவரது கருத்துக்களை வெகு நாகரிகமாக வெளிப்படுத்தும் பண்பு சி.வை.தா.வுக்கிருந்தது. தமிழ் மொழியின் வளர்ச்சி என்ற சிந்தனையோடு அவர் செயற்பட்டமையால், தமிழ் கற்பிக்கின்ற தமிழறிஞர்களைச் சுட்டிக் காட்டவும் அவர் விரும்பவில்லை. ஆனால் அதே சமயத்துத் தமிழாய்வு பற்றிய அவரது விளக்கமான கருத்துக்களைக் கூறவும் தயங்கவில்லை.

> இலக்கிய வல்லாருக்கு இலக்கணந்தானாயமையும். இஃதெப் பாஷைக்கும் சாதாரண தர்மம். இங்கிலிஷ் பாஷையில் மகா பாண்டித்தியமுள்ளோர் சிலர் தாம் இங்கிலிஷ் இலக்கணஞ் சிறிதும் கற்றதேயில்லையென்று சொன்னதை நாம் காதாரக் கேட்டிருக்கிறோம்.[13]

மேற்கூறிய இக்கூற்றுக்கள் சி.வை.தா. தமிழ் பற்றிய ஆய்வினை மேற்கொள்ளும் போது, பிற மொழிகளையும் ஒப்பிட்டு ஆய்வு நடத்த முற்பட்டாரென்பதை உணர்த்தி நிற்கின்றன. தனித் தமிழ் வல்லுநராக மட்டுமன்றி ஆங்கிலத்திலும் புலமை பெற்றிருந்தமையால் இத்தகைய கருத்துக்களைச் சி.வை.தா. கூறமுடிந்த தெனலாம். சி.வை.தா.வுக்கிருந்த இலக்கியத் திறனாய்வுத்திறனும் இதற்கொரு காரணமெனலாம்.

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

# மூலப்பாடத் திறனாய்வு

பழந்தமிழ் நூல்களை ஏட்டுவடிவிலிருந்து புத்தக வடிவிற்கு மாற்றியமைக்கும் போது ஏற்படக்கூடிய இடர்கள் பலவாகும். அவற்றையும் சி.வை.தா. தமது பதிப்புக்களிலே அடிக்கடி குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு அவற்றைக் குறிப்பிட வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில் நவீன அறிவியற்றுறைகளிலே ஒன்றான மூலபாடத் திறனாய்வுக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்த தற்காலத்திலே பதிப்பு முயற்சியிலே மூலபாடத் திறனாய்வு மிகுந்த பங்கு கொண்டுள்ளமை பெரிதும் உணரப்படுகின்றது. ஏட்டுவடிவில் நூல்களுக்குக் குறைபாடுகள் நேர்வதற்கு இடமுண்டு. ஏடெழுதிய சிலர் போதிய கல்வியறிவில்லாத வர்களாக இருந்திருக்கலாம். அவர்கள் சிறிதளவு கற்றுக் கூலிக்கு எழுதுபவர்களாதலால் பிழையிருப்பின் திருத்தும் வல்லமையற்ற வர்களாயுமிருப்பர். இதை விடக் கற்றறிந்தவர்களாயினுங் கூட, விரைவு, கவனக்குறைவு, வேலைக்கடுமை, உடற்சோர்வு, மறதி ஆகிய காரணங்களாற் பிழை செய்திருக்கவுங் கூடும். சிலவேளை ஒருவர் மூலவேட்டைப் படிக்க , மற்றொருவர் கேட்டு எழுதியது முண்டு. படிப்பவர் தவறாகப் படித்தாற் கேட்பவரும் பிழை யாகவே எழுதுவர்.

சி.வை.தா. இப்பதிப்புப் பணியில் ஈடுபட்டபோது ஏடுகளைத் தேடித் திரிந்ததையும் அவற்றைப் பெற்றமையையும் பற்றி விரிவாகப் பதிப்புரைகளிலே குறிப்பிட்டுச் சொல்கின்றார். இத்தகைய ஏடுகளைக் கொண்டு நூல்களை அச்சிடத் தொடங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பாக அவர் செய்ய வேண்டிய பணிகள் பல இருந்தன. இப்பணிகளைப் பதிப்பாசிரியர் ஒருவர் பின்வருமாறு கூறுகின்றார்:

> பண்டைத் தமிழ் நூல் ஏடுகளை அச்சிடுவது என்பது எளிய வேலையன்று. ஆழ்ந்தகன்ற பயிற்சியும் கூர்ந்து செல்லும் மதிநுட்பமும் ஏட்டுச் சுவடியில் பன்னெடுங்காலப் பழக்கமும் சிறந்த பயிற்சியுடையார் துணையும் உடையவரே பண்டைத் தமிழ் நூல் ஏடுகளை அச்சிடுவதற்குரியவர். இன்னோர் தாமும் தாம் அச்சிடப்புகும் நூற்குப் பற்பல ஏட்டுப்பிரதிகள் தேடி வைத்துக்கொள்ள வேண்டும். அவற்றில் ஒன்றிரண்டேனும் சிறந்த புலவர் கைப்பட்டனவாய், அன்றிச் சிறந்த பயிற்சியுடை யோரால் எழுதப்பட்டனவாய் இருத்தல் வேண்டும். இவர், தாம் அச்சிட எடுத்துக் கொள்ளும் நூலுரைகளைப் பன்முறை பயின்று அந்நூற் பொருள் முழுவதையும் சிலையெழுத்தெனத் தம் மனத்தகத்தே பதிப்பித்துக்கொண்டு அப்புணர்ச்சியோடு பண்டைத் தமிழ் இயனூல், செய்யுனூல்களையெல்லாம் ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து ஒப்புமைப் பகுதிகள், மேற்கோள்கள், விளக்கங்கள் முதலியவற்றைத் திரட்டிக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம் எல்லாம் பண்டை நூற் பதிப்புக்குச் செய்யத்தகும் முன்வேலைகள் பின்வேலைகள் பலவாகும்.[14]

இத்தகைய வேலைகளையெல்லாம் சி.வை.தா. கருத்திற் கொண்டு தமது பதிப்புக்களை முன்னரே செய்திருக்கிறார். மேற்குறிப்பிட்ட கருத்து வெளியிடப்பட்ட காலம் சி.வை.தா. மறைந்து 20 வருடத்திற்குப் பின்னரேயாகும். இதனாற் பதிப்பு உத்திகள் பற்றி நுணுக்கமான கருத்துக்களை அவர் தமது அநுபவரீதியாகவே பெற்றிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. பதிப்புக்கலை பற்றிய விஞ்ஞான பூர்வமான ஆய்வுக் கருத்துக்களை மனத்துட்கொண்டு செயலாற்றியவர் போலச் சி.வை.தா. காணப்படுகிறார். பல்வேறு பிரதிகளை எடுத்து ஒப்புநோக்கிப் பார்த்து, அவற்றின் பாடபேதங்களை மனத்துட் கொண்டு, தமக்குச் சரியான பிரதியாகக் கண்டதையே நூல் வடிவாக்கினார். மூலபாடத்திறனாய்வின் போது ஏற்படக்கூடிய பிரதிகளின் வழுக்களின் தன்மைகளைக் கூட அவர் மனத்துட் கொண்டே இதனைச் செய்திருக்க வேண்டும். ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய மூல பாடத்திறனாய்வு அவருக்கு எப்படி ஏற்பட்டது என்பதும் கேள்விக்குரியதொன்றாகவும் சிந்தனைக்குரியதொன் றாகவும் காணப்படுகின்றது. கலப்புப் பிரதிகளைக் கொண்டு மூலப் பிரதிகளுக்குச் சமமான பிரதிகளை அவர் தேட முற்பட்டிருப்பது அவரது கலித்தொகைப் பதிப்புரையில் உணரக் கிடக்கிறது. இவ்வாறு பிரதிகளை ஆராய்ந்து பார்த்துக் காலத்திற்கேற்றவாறு அவற்றின் மூலபாடத்தைத் தெளிவாக்கவும் முற்பட்டிருக்கிறார். இதற்கு நல்ல உதாரணம் கலித்தொகைப் பதிப்புரையில் அவர் கூறுவதேயாகும்.

> நெய்தற்கலி 29 ஆம் செய்யுள் 7ஆம் அடியில் 'உண்ணிறை மல்க' எனவும் 16ஆம் அடியில் 'தூவற' எனவும் பாடமாக உரையில் அவற்றிற்கு முறையே 'உன் கண்ணீர் நிறை கையினாலே' எனவும் 'வலியுறும்' படியெனவும் பொருள் கூறி இருப்பது பிற்காலத்து ஏடெழுதுவோரால் நேரிட்ட தவறென்றும் நீரென்றதற்கும் வலியென்றதற்கும் இயைபு மறுபாடத்தை உறையென்றும் தாவென்றும் மாற்றிவிடுதல் தகுதியென்றுஞ் சில தக்கோர் சொல்லியும் யான் அதற்கு உடன்பட்டிலேன். நீரிற்கு உறையென்பது போலத்தூவென்றும் முற்கால வழக்கு இருந்திருக்கலாமே. எத்தனை சொற்கள் தற்கால வழக்கில் இருந்திருக்கலாமே. எத்தனை சொற்கள் தற்கால வழக்கில் எடுத்தாளாத பொருளிற் பண்டையோராற் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இலக்கிய, இலக்கண ஆதார மாக ஒன்றிணைத்தவரென்று ஒரு தலையாய நிச்சயித்துழி யன்றி ஏட்டுப் பிரதிகள் யாவும் ஒத்திருந்தனவற்றை யான் மாற்ற கில்லேன். அடியேன் சிற்றறிவுக்கேற்ற மட்டும் பரிசோதனை செய்து அச்சிட்டு அடியோடழிந்து போகும் பழைய நூல்களை நிலைநிறுத்துவான் புகுந்தேனேயாதலின் நூலைத் திருத்து வதும் பொருள் இசையச் செய்வதும் என் கடமையன்று. இயன்றளவு பூர்வரூபம் பெறச் செய்வதும் இயலாத இடத்து இருந்தபடி உலகிற் கொப்பிப்பதுமே யான் தலையிட்ட தொழிலென்பதை இன்னுமொருகால் உலகத்தார் முன் விண்ணப்பஞ் செய்து கொள்கிறேன். பிழையாயினவற்றைத் திருத்திப் படிப்பது ஆன்றோர் கடன். கண்ணுக்கும் அகப் படாமற் கிடந்த ஏட்டுப்பிரதிகளைக் கடிதத்திற் பல பிரதிரூபஞ் செய்து கைக்கெட்டப் பண்ணுகிறேனென்றே கொள்ளுக.[15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பதிப்புக்கலை பற்றிய அறிவு ஏற்பட்டதற்குக் காரணம் அவரது ஆழ்ந்த ஆய்வு மனப்பாங்கினாலே யெனலாம். மூல பாடத் திறனாய்வுக் கொள்கைகளிலே காணுகின்ற அடிப்படை அம்சங்கள் சிலவற்றைச் சி.வை.தா. அறிந்திருந்தமையே அவரது திறமைக்குச் சான்றாக விளங்குகின்றது என்று கொள்வதற் கில்லை. ஏனெனில், பிற்காலத்தில்தான் இக்கொள்கைகள் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. 1954ஆம் ஆண்டு T.M. Katre என்பவர் தாமெழுதிய 'Introduction to Indian Textual Criticism' என்ற நூலிற் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் சி.வை.தா.வின் பதிப்புக்களிலே காணப்படுகின்றன. திறனாய்வுப் படிமுறையிலே முக்கியமாக நான்கு படிமுறைகள் காணப்படுகின்றன. அவையாவன: பிரதிகளைக் கால அடைவில் வைத்து நோக்கல், தேர்ந்தெடுத்தல், பிரதிகளை ஆராய்ந்து நம்பகத் தன்மையின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல், உயர்நிலைத் திறனாய்வு என்பவையாகும். இத்தகைய படிமுறை வளர்ச்சிகளைச் சி.வை.தா.வின் ஆய்வு மனப்பாங்கோடு பொருத்திப் பார்க்கு மிடத்துத்தான் அவரது தனித்துவத்தை நாம் காணமுடிகிறது.

சி.வை.தா.வுக்குக் கிடைத்த பிரதிகளின் ஆசிரியர்கள் வெவ்வேறு வகையிற் கொண்ட பாடல்களே பாடபேத ஆராய்ச்சியினைச் செய்யத் தூண்டின. இதுவே மூல பாடத் திறனாய்வுக்கு வித்திட்ட ஒரு அம்சமாகும். இன்னும் இவ் வாய்வினைச் சி.வை.தா. கலை நுட்பமாகச் செய்ய முற்பட்டிருக் கிறார். கலையாராய்ச்சி, மொழியியலாய்வு, ஒப்பியலாய்வு என்பவற்றின் துணைகொண்டு தமது கருத்துக்களை நிறுவ முற்பட்டிருக்கிறார். பாடபேத ஆய்வின் பண்பும் பயனுமாகக் கருதப்பட்ட மூலப்பிரதியை நிர்ணயிக்கவும் முற்பட்டிருக்கிறார்.

மூல பாடத்திறனாய்வின் குறிக்கோள் பற்றிக் கூறவந்த காத்ரே.

> மூலபாடத்திறனாய்வின் குறிக்கோள் யாதெனில் நமக்குக் கிடைக்கின்ற பிரதிகள், ஆவணங்கள் ஆகியவற்றிலே காணப்படும் சான்றுகளை நுனித்து நோக்கி அவற்றினடியாக எவ்வளவு தூரம் பின்னோக்கிச் சென்று ஆசிரியரின் சொந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையெழுத்துப் பிரதி நிலைக்கோ, அதனை அண்மித்த நிலைக்கோ செல்லும் முயற்சியாகும் என்கிறார்.[16]

இக்கருத்தின் அடிப்படையில் சி.வை.தா.வின் ஆய்வினை இணைத்து நோக்குமிடத்துச் சி.வை.தா. இத்தகையதொரு முயற்சியிலேயே தமது வாழ்நாளைச் செலவழித்தார் என்பது பெறப்படுகிறது. இன்னும் காத்ரே கூறுகின்ற எழுத்து நிகழ்தகவு (Transcriptional Probability) என்னும் அம்சத்தில் கூடச் சி.வை.தா. முயற்சி செய்துள்ளார்.[17]

பதிப்பாசிரியர்கள் எல்லாப் பிரதிகளையும் நுண்ணாய்வு செய்தபின் நான்கு வகையான முடிவுக்கு வரலாம். அவையாவன: ஏற்றுக்கொள்ளுதல், ஐயுறுதல், தள்ளுதல், மாற்றுதல் என்பன வாகும்.[18] இந்த முடிவுகளிலே சி.வை.தா. இறுதி முடிவையே சில இடங்களிற் செய்திருக்கிறார்.[19] இதனால் மூலபாடத்திறனாய்வுக் கொள்கைகள் பற்றித் தெளிவான விளக்கங்களை அவர் கற்றிராத போதும் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கு அவருக்கு உதவியாக இருந்தது அவரது நுண்ணாய்வுத் தன்மையேயெனலாம். இங்கு மூலபாடத் திறனாய்வு நோக்கில் வளர்ச்சி பெற்றவர் என்பதனை யும் நிரூபித்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# தமிழ்மொழி வளர்ச்சிக்கு சி.வை.தா.வின் பங்கு

சி.வை.தா. வாழ்ந்த காலத்தில் ஆங்கிலமொழி வேகமாகப் பரவி வந்தது. தமிழ்மொழி கவனிப்பாரற்றுத் தேய்வடைய முற்பட்டது. இதனால் தமிழ்மொழியை வளர்க்க வேண்டிய முயற்சிகளில் ஈடுபட வேண்டிக் கற்றறிந்தோர் பலரும் பல்வேறு பணிகளில் முயன்றனர். 19ஆம் நூற்றாண்டிலே இருந்த புலவர்களைப் பற்றியும் அவர்கள் இயற்றிய தமிழ் நூல்கள் பற்றியும் விரிவாக மயிலை சீனி. வேங்கட சாமி அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழிலக்கியம் என்னும் தமது நூலிற் குறிப்பிட்டுள்ளார். அப்புலவர்களிற் சி.வை.தா. வேறு பட்டவராக விளங்குவதற்குச் சில காரணங்கள் உண்டு.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பன்முகப்பட்ட பணிகளை அவர் செய்ய முற்பட்டார். தமிழ்மொழியை வளர்த்தற்குரிய வழிகளைப் பற்றிச் சிந்தித்தார். தமிழ் நாட்டிலே நூல்களைப் படிக்கும் தொகையினர் அதிகமானால்தான் தாய்மொழியும் வளர்ச்சியடையும் என்பதை உணர்ந்தார். இக்காலத்திலே திருவாவடுதுறை போன்ற செல்வம் நிறைந்த மடங்கள் பல தமிழை வளர்த்து வந்தன. ஆனால் அவர்கள் தமது மடத்தளவுடன் தான் அதனைச் செய்து வந்தனர். மடத்திற் போயிருந்து கல்விகற்கும் வாய்ப்பினைப் பெற்றவர்களுக்கு மட்டுமே அப்பயனை அளித்துவந்தனர். தமிழிலக்கிய இலக்கண நூல்களை யாவரும் படித்துப் பயன்பெற வேண்டுமென்ற ஒரு பொதுமை நோக்குடன் சி.வை.தா. செயற்பட்டார். உதாரணமாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாவடு துறையாதீனத்திற் பரம்பரை பரம்பரையாக அறிஞர்கள் இருந்து தமிழ்மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள் ளார்கள். இதனை ஆதீன வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளைய வர்கள் பாடிய குருபரம்பரையகவல் மூலமறிய முடிகின்றது.[20] ஆனால் அவர்களது தமிழ்ப்பணி பரந்துபடாமைக்குப் பிறமொழிக் கல்வியறிவின்மையும் ஒரு காரணமாகும். இன்னும் மரபுமுறைக் கல்வி முறைக்குக் குந்தகமின்றியே அவர்கள் தமிழை வளர்க்க முற்பட்டனர். ஆனால் சி.வை.தா.வோ காலத்தோடொட்டிய மொழிவளர்ச்சிக்கான தேவைகளை நினைத்துப் பணிபுரிந்தார். தமிழ்மொழியின் வளர்ச்சிப் பணிகளைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்த பெருமையும் சி.வை.தா.வையே சாரும். பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சி பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் ரா.பி.சேதுப்பிள்ளை அதனைப் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்:

> இலக்கிய ஆராய்ச்சித்துறையை எடுத்துக் கொண்டால் பழம் பெரும் காவியங்களில் பெரும்பாலானவற்றிற்குத் திருத்தமான பதிப்புரைகள் வெளிவருவதற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் உதவி புரிந்திருக்கின்றது. பல்கலைக்கழகத்தின் முதலிரண்டு பட்டதாரிகளில் ஒருவரான திரு.சி.வை. தாமோதரம்பிள்ளைய வர்கள் கலித்தொகையையும், நச்சினார்க்கினியரின் தொல்காப் பிய உரையையும் ஆராய்ச்சி விளக்கத்துடன் பதிப்பித்திருக் கிறார்கள்.[21]

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதல் பட்டதாரியான சி.வை.தா.வினால் தமிழாராய்ச்சி பல்கலைக்கழகத்துடன் இணைந்தது. அதுவே இப்போது பல்வேறு வகைகளிற் பரவி வளர்ந்துள்ளது. இன்னும் பல்கலைக்கழகப் பாடத்திட்ட அமைப்பாளர்களில் ஒருவராக இருந்தமையால் தமிழிலக்கியங் களை மாணவர்கள் கற்பதற்கு உதவும் வகையில் சி.வை.தா. அவற்றைப் பாடத் திட்டத்திற்குள் புகுத்தினார்.

தமிழறிவு மேலும் சிறப்பதற்கு ஆங்கில அறிவும் மிகவும் அவசியமானது என்ற கொள்கையோடு சி.வை.தா. வாழ்ந்தாரெ னலாம். பரிதிமாற்கலைஞருக்கும் சி.வை.தா.வுக்குமிருந்த தொடர்பு இதனை வலியுறுத்திக் காட்டுகின்றது. தமிழறிவு பெற்றிருந்த பரிதிமாற்கலைஞரை ஆங்கில அறிவிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதித்துப் பார்த்து அதனை மெச்சியவர் சி.வை.தா. 'பல்கலைக் கழக அறிவு பரந்து பட்டதாக இருக்க வேண்டும்'[22] என அவர் விரும்பியதை இது உணர்த்தி நிற்கின்றதெனலாம். மேலும் ஆங்கிலக் கவிஞர்களது கவிதைகளிலே அவருக்கிருந்த பயிற்சி யையும் ஆர்வத்தையும் அது புலப்படுத்துகின்றது எனலாம்.

ஆங்கிலக்கல்வி மரபினால் தமிழ்க் கல்வி சிதைவுறாவண்ணம் பாதுகாக்கும் பணியில் சி.வை.தா.முனைந்து பிறமொழிக் கலப்பினால் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக்களை ஏற்றுக் கொண்டவராகவுமிருந்தார். ஆங்கிலக் கல்வித் தேர்ச்சிப் பட்டங்களுக்கு ஏற்பத் தமிழ்ப் பெயர்கள் வழங்கப்பட வேண்டுமென்ற அவா இதனை உணர்த்துகிறது. பிறமொழிகளின் பண்புகளுக்குத் தமிழ் சற்றும் குறைந்ததல்ல என்ற எண்ணத்தைச் சி.வை.தா.கொண்டிருந்தார்.

> எவ்.ஏ. (F.A), பீ.ஏ. (B.A), எம்.ஏ (M.A), எல்.டீ. (Litt.D) என்பவற்றிற்கு முறையே வித்தியார்த்தி, வித்தியாவினோதன், வித்தியாநாயகன், வித்தியா பண்டிதனென்று இவை தக்க மொழியாகு மென்றெண்ணி அவை வழக்கத்தில் வருமாறு பீ.ஏ. (B.A) க்குப் பதிலாக வித்தியாவினோதன் என வரைந்தனன். அஃது உலகிற்கு ஒக்குமெனிற் கொள்க![23]

மேற்குறிப்பிட்ட கலைச் சொல்லாக்கம் அவரது தமிழறிவின் தன்மையை உணர்த்துவதுடன் தமிழ்மொழி வளர வேண்டு மாயின் பிறமொழி உணர்த்துபவற்றை உணர்த்தக் கூடிய ஆற்றல் பெற வேண்டும் என்பதை எடுத்து விளக்குகிறாரெனலாம்.

இன்னும் அவரது மொழிபற்றிய உணர்வு தமிழ்மொழியின் தனித்துவத்தைப் பேணல் என்ற அடிப்படையிலே அமைந்திருந்த தெனலாம். தமிழிலக்கிய வரலாற்றுக் காலப் பகுப்புப் பற்றிய செய்தியில் ஆதீனங்களைப் பற்றிக் குறிப்பிடுமிடத்து இக்காலம் சந்தானகுரவர் காலத்தையும் சேர்த்து இற்றைக்கு எழுநூறு வருஷத்தின் முன் தொடங்கியது எனக் குறிப்பிடுகிறார். இதே சந்தர்ப்பத்தில் அடிக்குறிப்பிலே:

> காஞ்சி நகரத்தில் காமகோடி பீடமும் கன்னடதேசத்திற் சிங்கேரி மடமும் இதற்கு வெகு காலத்தின் முன்தோன்றி ஆண்டும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நூல்களும் பாஷியங்களும் செய்யப்பட்டுள்ளனவாயினும் அவையெல்லாம் சமஸ்கிருதத்திலாயினமையால் அவற்றைச் சேர்த்திலேம்.[24]

என்று குறிப்பிட்டுச் சொல்கின்றார். இவ்வாறு அவர் கூறிச் சொல்வது தமிழின் சிறப்பினைக் கூற முற்பட்ட போதும் மற்றைய மொழி இலக்கியங்கள் பற்றிய கருத்துக்களையும் ஆராய்ந்து கூறுதல் என்ற நடுநிலைமைப் பண்பினையுஞ் சுட்டிநிற்கின்றது. தமிழ் மொழியின் ஒப்பீட்டாய்வு மிகவும் அவசியம் என்பதனை அவர் உணர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் இக்காலத்தில் வடமொழிச் செல்வாக்கும் அதேநேரத்தில் ஆங்கிலமொழிச் செல்வாக்கும் தமிழகத்திலே நிலவியிருந்தன. இதனால் ஏனைய மொழிகளுடன் ஒப்பிட்டுத் தமிழின் சிறப்பை உணர்த்த எண்ணினரெனலாம்.

இன்னும் சி.வை.தா.பதிப்பித்த நூல்களிலே இலக்கண நூல்களே அதிகமாக இருக்கின்றன. தமிழ் மொழியை வளர்த்தற்கு ஏற்ற வழிகளில் இலக்கண மரபுகளையறிதலும் பெரிதும் உதவி செய்யுமென அவர் கருதியிருக்க வேண்டும். ஏனெனில் பழந்தமிழிலக்கியங்கள் யாவும் செய்யுள் நடையிலே அமைந்திருந்தமையால் அவற்றை மக்கள் படித்து அநுபவிப்பதற்கு இலக்கணங்களின் உதவி பெரிதும் வேண்டப்பட்டது. குறிப்பாகத் தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கணவிளக்கம் போன்ற நூல்களிலே கூறப்பட்ட இலக்கணக் கூறுகள், சங்க இலக்கியங்களைத் தெளிவதற்கு மிகவும் உதவியாக இருந்தன. ஏனெனில் இவ்விலக்கண நூல்கள் சங்க இலக்கிய மொழி நடையையே ஆதாரமாகக் கொண்டமைந்தவையாக இருந்தன. இதனாற் சி.வை.தா.தமிழ்மொழி வளர்ச்சியின் ஒருகால கட்டத்து நிலைமையைப் பின்வருவோர் தெளிவுறு அறிவதற்காகத் தமது பதிப்பு முயற்சியிலும் பெரும்பாலும் இலக்கணத்திசையில் சென்றாரெனலாம்.

> இந்நூல் உலகிற்றோன்றிய காலமுதல், நூற்றைம்பது இருநூறு வருஷமாக நன்னூல் முதலிய ஏனைய சிற்றிலக்கணங்களெல்லாம் பயிற்சி குன்ற இதுவே தலையெடுத்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> பதினேழாம் சகாப்தம் முதல் இற்றைக்கு ஐம்பதறுபது வருஷத்திற்கு முன் வரைக்கும் சென்னை, காஞ்சி, புதுவை, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, யாழ்ப்பாணமென்ற இன்னோரன்ன தமிழ்த்தேசங்களில் இலக்கணங்கள் போற் பெரும்பாலும் ஓதி வந்ததும் இதுவே.[25]

என்று சி.வை.தா.கூறுவது இவ்விலக்கணங்களின் தேவை கருதி அவர் பதிப்பித்தமையை உணர்த்துகின்றது. மொழி வளர்ச்சியுறும் போதும் புது மரபுகள் பல தோன்றும். ஆனால் அதேசமயத்தில் மொழியின் வளர்ச்சிப் படிநிலைகள் பற்றிய ஆய்வுக்குப் பழைய மரபுகளையும் நாம் இணைத்து ஒப்பிட்டு நோக்க வேண்டியத வசியமாகும். இத்தகைய முயற்சியைச் செய்தது நன்மையாகவே முடிந்தது. ஏனெனில் நவீன மொழியியலாய்வாளர் கூடப் பழைய இலக்கண மரபு கொண்டு வளர்ச்சிப் படிநிலைகளை உறுதி செய்வதற்கு இவ்விலக்கணப் பதிப்புக்கள் பெரிதும் உதவி நிற்கின்றன.

தொகுத்து நோக்குமிடத்து சி.வை.தா.வின் தனித்துவம், மதிப்பீட்டாய்வில் பெரும்பாலும் தமிழின் வளர்ச்சிக்காகப் பாடு பட்டவர் என்ற அடிப்படையிலே அடக்கப்பட்ட போதும், அவருடைய தொண்டும் பணியும் ஆய்வதற்குரியன என்பது புலப்படுகின்றது. ஈழத்திற் தோன்றிய தமிழறிஞர்களிற் பலர் காலச் சுழற்சியிற் போற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களது தமிழ்த் தொண்டும் பணியும் மதிப்பீட்டளவில் மற்றவர்கள் அறியாதன வாகவே இருக்கின்றன. இத்தகையவர்களிற் சி.வை.தா. வும் ஒருவராகவே காணப்படுகின்றாரெனலாம்.

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# இறுதிக்காலம்

சி.வை.தா.வின் வாழ்க்கையினிறுதிக் கட்டத்தில் அவரது வரலாற்றையே சிறப்பிக்கும் வகையில் சில பின்னணிகள் காணப்படுகின்றன. தமது வாழ்க்கையின் பெரும்பாலான பகுதிகளைத் தென்னிந்தியாவிலே கழித்த இவரது பெருமை ஈழத்தில் மட்டுமன்றித் தென்னிந்தியாவிலும் வெகுவாகப் பரவியது. பொதுசன மதிப்பைக் கருத்திற் கொள்ளாது தமிழை வளர்த்துச் சிறப்பிக்க வேண்டு மென்னும் ஆர்வம் கொண்ட வராகவே அவர் காணப்படுகின்றார். நூல்களைப் பதிப்பிக்கப் புகுந்தமையால் பணநஷ்டமும் தேகசுகமும் குன்றியபோதும் இறுதிவரை அதுவே தமது கடமையென வாழ்ந்தார். உத்தி யோகத்தை விட்டு உபகாரச் சம்பளம் பெற்று இளைப்பாறிய பின்னரும் இவ்வாறு கடுமையாக உழைத்திருக்காதிருப்பின் அவர் இன்னுஞ் சிலகாலம் உயிருடன் இருந்திருக்க முடியும்.

வெகு எளிமையான வாழ்வினை அவர் மேற்கொண்டிருந்தார். வித்துவான், பண்டிதர், நாவலர், புலவர் முதலிய பட்டமெதனையும் பூணாது 'தாமோதரம்' என்ற இயற்பெயருடனேயே வாழ்வு நடத்திய அவருக்கு இலக்கிய உலகம் 'பதிப்பாசிரியர்' என்ற பட்டத்தை நல்கியது. இறுதிக்காலத்தில் அவர் சைவசமயத்தி னைத் தீவிரமாகக் கைக்கொண்டிருந்தமையால் ஈழத்தறிஞர் சிலர் தற்காலத்தில் சி.வை.தா.வுக்குச் சைவப் பெரியார் என்ற பட்டத்தை வழங்க முற்படுகின்றனர். ஆனால் பிள்ளையவர்கள் இவ்வாறு பட்டம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு சைவத்தைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தழுவியவர் என்று கூறமுடியாது. அவரது வாழ்க்கைப் பின்னணியே அவர் மதம் மாறுவதற்குக் காரணமாயிற்றெனலாம்.

சி.வை.தா.இருபதாம் நூற்றாண்டு முதல் மாதம் முதல்தேதி (01-01-1900) இகவாழ்வை விடுத்துப் பரவாழ்வடைந்தார். அவரது இறுதியாத்திரை புரவைசாக்கத்தில் நடைபெற்றது. உத்தரக் கிரியைகள் ஜனவரி மீ 18ஆம் திகதி புரசை ஸ்ரீ கங்காதரேசுவரர் கோயிற் பூந்தோட்டத்தில் நடைபெற்றது. இச்சமயத்தில் பற்பல தமிழ் வித்துவான்கள் சி.வை.தா.மீது சரமகவி பாடி அவர்மீது தமக்குள்ள அன்பையும் பெருமதிப்பினையும் எடுத்துக்காட்டினர்.

உரைநடையாளர், கவிஞர் என்ற இரண்டு நிலைகளிலும் சிறந்த ஓரிடத்தைப் பெறக்கூடியவராகச் சி.வை.தா.இருந்தபோதும் உதயதாரகை, தினவர்த்தமானி போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்தபோதும், சைவசமயம் பற்றிப் பல நூல்களை எழுதியபோதும், 'சிறந்த பதிப்பாசிரியர்' என்ற பட்டத்தினையே அவருக்கு வழங்கி பெருமைக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகள்

1. 'சைவப்பெரியார் சி.வை.தாமோதரம்பிள்ளை' தொடர் கட்டுரை, *தினகரன் வாரமஞ்சரி*, 4-9-1977.
2. எஸ். இராஜரத்தினம் , *இ.ராவ்பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை சரித்திரம்*, ஜூபிலி பிரஸ், மதறாஸ், 1902, பக்.8.
3. சு. வித்தியானந்தன் ,'தமிழகத்தை ஈழநாட்டுக்கு கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர்' , *நாவலர் மாநாடு விழா மலர்*, மெய்கண்டான் அச்சகம் லிமிட்டெட், கொழும்பு, 1969, பக்.125.
4. சோமலே, *வளருந்தமிழ்*, பக். 39-40.
5. எஸ். இராஜரத்தினம் , *மு.கு. நூல்*, பக் 14.
6. உ.வே. சாமிநாதையர் , *என் சரித்திரம்*, பக்.729.
7. ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் , *தற்காலத் தமிழ் இலக்கியம்*, திருநெல்வேலி, 1942, பக்.154-155.
8. உ.வே.சாமிநாதையர் , *மு.கு.நூல்*, பக் 782-783.
9. சபாபதி நாவலர், *மு.கு.நூல்*, பக்.55.
10. கு.முத்துக்குமாரசாமிப்பிள்ளை , *குமாரசாமிப் புலவர் வரலாறு*, புலவரக வெளியீடு, யாழ்ப்பாணம், 1970, பக்.18.
11. *சி.வை. தாமோதரம் எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு*, பக்.68-69.
12. சி.வை.தா., *வீரசோழியப் பதிப்புரை*.
13. சி.வை.தா., *வீரசோழியப் பதிப்புரை*.
14. *தொல்காப்பியம் - சொல்லதிகாரம்*, தெய்வச்சிலையார் உரை, கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடு, பதிப்புரை, பக்.9-10.
15. சி.வை.தா., *கலிதொகைப்பதிப்புரை*.
16. S.M. Katre , *Introdution to Indian Textual Criticism*, p.30.
17. சி.வை.தா., *கலித்தொகைப் பதிப்புரை*.
18. S.M. Katre, *Ibid.*, p.65.
19. சி.வை.தா., *கலித்தொகை பதிப்புரை*.
20. 'குருபரம்பரையகவல்', மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடியது, *செந்தமிழ்ச்செல்வி*, 1927-28, பக்.47-48.
21. 'பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சி', ரா.பி.சேதுப்பிள்ளை, *செந்தமிழ்ச் செல்வி*, 31, 1956-57, பக். 274.
22. ந. சுப்பிரமணியம், *வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியார்*, பக்.37-43.
23. சி.வை.தா., *இறையனாராகப் பொருள் பதிப்புரை*, இரண்டாம் பதிப்பு, விகாரி வருடம்.
24. சி.வை.தா. *வீரசோழியப் பதிப்புரை*, 2ஆம் பதிப்பு, அடிக்குறிப்பு, விசு வருடம்.
25. சி.வை.தா., *இலக்கண விளக்கப் பதிப்புரை*, விரோதி வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்புகள்

### (i). சி.வை.தாமோதரம் பிள்ளை பதிப்பித்த நூல்கள்

#### அ. இலக்கணம்

1. தொல்காப்பியம்: சொல்லதிகாரம் - சேனாவரையம் 1868
2. வீரசோழியம்: பெருந்தேவனாருரை 1881
3. இறையனாரகப் பொருள்: நக்கீரருரை
4. தொல்காப்பியம்: பொருளதிகாரம் - நச்சினார்க்கினியம் 1885
5. இலக்கண விளக்கம் 1889
6. தொல்காப்பியம்: எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியம் 1891
7. தொல்காப்பியம்: சொல்லதிகாரம் - நச்சினார்க்கினியம் 1892

#### ஆ. இலக்கியம்

1. நீதி நெறி விளக்கம் -சி.வை.தா. உரையுடன் 1853
2. தணிகைப் புராணம் 1883
3. கலித்தொகை -நச்சினார்க்கினியருரை 1887
4. அகநானூறு (முற்றுப் பெறாதது) 1897
5. சூளாமணி 1889

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ii). சி.வை. தாமோதரம்பிள்ளை இயற்றிய நூல்கள்

1. சைவ மகத்துவம்
2. விவிலிய விரோதம் ஒரே பதிப்பு 1867
3. வசன சூளாமணி (அ) திவிட்ட குமாரன் கதை 1898
4. நட்சத்திர மாலை
5. ஆதியாகம கீர்த்தனம்
6. கட்டளைக் கலித்துறை (இலக்கணம்)
7. ஆறாம் வாசகப் புத்தகம்
8. ஏழாம் வாசகப் புத்தகம்
9. காந்தமலர் (அ) கற்பின் மாட்சி (நாவல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii நூல் விற்பனைத் தொடர்பான சி.வை. தா.வின் விளம்பரம்

### விளம்பரம்

யான் பதிப்பித்த புத்தகங்கள் இதன் அடியிற் குறித்தபடி சென்னை பட்டணத்தில் வித்தியாநுபாலனயந்திரசாலையில் ந.க. சதாசிவப் பிள்ளையவர்களிடத்துங் கலாரத்நாகர அச்சுக்கூடத்தில் ஊ. முத்துக் குமாரசாமிச் செட்டியாரவர்களிடத்தும் விக்டோரியா ஜூபிலியந்திர சாலையில் வி. சுந்தர முதலியாரவர்களிடத்துஞ், சிதம்பரத்திற் சைவப் பிரகாச வித்தியாசாலை விசாரணைக்கருத்தர் க. பொன்னுசாமிப் பிள்ளையவர்களிடத்தும், யாழ்ப்பாணத்தில் ஏழாலைச் சைவப் பிரகாசவித்தியாசாலை உபாத்தியாயர் கன்லாகம் அ. குமாரசாமிப்பிள்ளையவர்களிடத்துந், தஞ்சாவூரிற் புத்தகவியாபாரம் த.நா. திருவேங்கட பிள்ளையவர்களிடத்துங், கோயமுத்தூரிற் புத்தகவியாபாரம் இ. ஒன்னைய கவுண்டரவர்களிடத்தும் வாங்கிக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| | ரூ. அ. |
| தொல்காப்பியம் நச்சினார்க்கினியம் எழுத்ததிகாரம். ... | க அ |
| ௸ ௸ சொல்லதிகாரம்.... | க அ. |
| ௸ ௸ பொருளதிகாரம். ... | கூ 0 |
| ௸ ௸ முழுவதுஞ்சேர்த்து. ... | எ அ |
| ௸ சொல்லதிகாரம் சேனாவரையம் ... | உ. 0 |
| நல்லந்துவனார் கலித்தொகை மூலமும் உரையும். ... | ங அ |
| வீரசோழியம் ...... ௸ ௸ ... | க அ |
| இறையனாரகப் பொருள் ... ௸ ௸ ... | க அ |
| இலக்கண விளக்கம் ... ௸ ௸ ... | ரு 0 |
| தணிகைப்புராணம். ... ... ... ... | ங 0 |
| சூளாமணி. ... ... ... ... ... க அ | |
| ௸ பத்துப் புத்தகமும் ஒருமிக்க வாங்குவோர்க்கு ... | உஉ 0 |
| கட்டளைக் கலித்துறை ... ... ... ... | 0 க |
| நக்ஷத்திரமாலை. ... ... ... ... | 0 க |

சி. வை. தா.

தொல்காப்பியம் - சொல். 1892.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக வாசிப்புக்குரிய நூல்கள்

இராசமாணிக்கனார், மா., *இருபதாம் நூற்றாண்டுப் புலவர் பெருமக்கள் I*, நேஷனல் பப்பிளிஷிங் கம்பனி, சென்னை, 1947.

இராமசாமிப்புலவர், சு.அ., *தமிழ்ப் புலவர் வரிசை*, 3 ஆம் புத்தகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை, 1948.

இராமலிங்கம், மு. 'நாவலர் இறந்தபின் நடந்தவை', *நாவலர் நினைவு மலர்*, திருமகள் அச்சுயந்திரசாலை, சுன்னாகம், 1938.

இராஜரத்தினம்பிள்ளை, ரி.ஏ., *தாமோதரம்பிள்ளையவர்கள் சரித்திரம்*, ல.முனுசாமி முதலியார் வெளியீடு, மதுரை, 1934.

கணபதிப்பிள்ளை, க., 'தாமோதரம்பிள்ளை', *இலங்கைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பத்திரிகை*, 03-03-1939.

.......... 'ஈழநாடு அளித்த இணையற்ற தமிழ்ப்பெரியார் தாமோதரம்பிள்ளை', *வீரகேசரி*, தேசிய நாளிதழ் 19-12-1949.

கணபதிப்பிள்ளை, சி., *இலக்கியவழி*, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பழைய மாணவர்சங்க வெளியீடு-2, திருமகள் அழுத்தகம், யாழ்ப்பாணம், 1964 (திருத்தப் பதிப்பு).

கணபதிப்பிள்ளை, சி, *ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்* , நா.பொன்னையா வெளியீடு, திருமகள் அழுத்தகம், யாழ்ப்பாணம், 1939.

கந்தையா, ஏழாலை பண்டிதர் மு., 'ராவ்பகதூர் சி.வை. தாமோதரம்பிள்ளை கிறிஸ்தவரா?', *ஈழநாடு வாரமலர்*, 28-11-1976.

கந்தையா, ஏழாலை பண்டிதர் மு., 'நல்லறிஞர் காட்சியில் சி.வை.தா.', *ஈழநாடு வாரமலர்*, 16-01-1977.

குமாரசாமிப்புலவர், *தமிழ்ப் புலவர் சரித்திரம்*, புலவராக வெளியீடு, யாழ்ப்பாணம். 1942.

கோபாலன், வே.பா. *புலவர் அகராதி (சுருக்கம்)*, துரைசாமி முதலியார் & கம்பனி வெளியீடு, சென்னை 1957.

சர்மா, 'தமிழ் வளர்த்த தாமோதரனார்: இன்று 130 ஆவது பிறந்ததினம்', *ஈழநாடு வார மலர்*, 12-09-1961.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபாபதி நாவலர், *திராவிடப் பிரகாசிகை என்னும் தமிழ் வரலாறு*, சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை, 1960 (மறுபதிப்பு).

சாமிநாதையரவர்கள், உ.வே., *என் சத்திரம்*, எஸ், கலியாணசுந்தரையர் வெளியீடு, சென்னை, 1950.

சிதம்பரநாதச் செட்டியார், அ., பதிப்பாசிரியர் சி.வை.தா., *ஈழகேசரி*, 11-03-1945.

சுத்தானந்தபாரதி, ' புலவர்மணி தாமோதரனார்', *ஈழகேசரி*, 11-03-1945.

சேதுப்பிள்ளை, ரா.பி., *இலங்கைப் புலவர்கள்*, ஒற்றுமை நிலைய வெளியீடு, சென்னை, 1952.

சோமலெ, *வளருந் தமிழ்*, பாரி நிலையம், சென்னை, 1956.

தாமோதரம்பிள்ளை சி.வை., அவர் இயற்றிய 'விநாயக வணக்கம்' பாடல், *உதயபானு*, 27-09-1880.

.................., 'சிறப்புப் பாயிரம்', பார்க்க: சபாபதி நாவலரின் *யேசு மதசங்கற்ப நிராகணம்*, 1882.

..................,(பதிப்பாசிரியர்), *நல்லந்துவனார் கலித்தொகை*, ஸ்கொட்டிஸ் பிரஸ், சென்னை, 1887.

.................., அவர் வழங்கிய 'சிறப்புக்கவி', சுப்பிரமணிய ஐயர், *இராமாயணம் வெண்பா*, எஸ்.வி இராமசுவாமி ஐயங்கார் பதிப்பு, சென்னை, 1889.

.................., (பதிப்பாசிரியர்), திருவாரூர் வைத்தியநாததேசிகர் இயற்றிய *இலக்கண விளக்கம் மூலமும் உரையும்*, வித்தியாநுபாலன யந்திரசாலை, சென்னை பட்டணம் விரோதி வரு. (1889).

.................., (பதிப்பாசிரியர்), *தொல்காப்பியம் சொல்லதிகாரம்*, விக்டோரியா ஜூபிலி யந்திரசாலை, சென்னை, நந்தன வரு. (1892).

.................., அவர் இயற்றிய 'சாற்றுகவி', சிவசுப்பிரமணிய சிவாசாரியார், *கந்தசட்டி புராணம்*, சென்னை, (1895).

..................,(பதிப்பாசிரியர்), *இறையனாரகப் பொருள்* (மதுரைக் கடைச்சங்கத்துக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் கண்டருளிய உரையோடு), ஜூபிலிபிரஸ், சென்னை பட்டணம், விகாரி வரு. (1899 இரண்டாம் பதிப்பு).

..................,(பதிப்பாசிரியரும் பரிசோதனாசிரியரும்), *வீரசோழியம் மூலமும் உரையும்*, தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணியையரது விஜயவர்த்தனி அச்சுக்கூடம், யாழ்ப்பாணம், குமாரசாமிச் செட்டியார் பதிப்பு, விசு வரு. (1905).

.................., கறல் விசுவாநாதபிள்ளை இறந்தபோது பாடிய பாடல், *நாவலர் நினைவு மலர்*, திருமகள் அச்சியந்திரசாலை, சுன்னாகம், 1938.

..................,*சைவ மகத்துவம்*, ஆய்வுக்கு உபயோகப்படுத்திய பிரதியில் வெளியீட்டு விபரங்கள் இல்லை. பிரதி கட்டுரையாளர் கைவசமுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

.................., *விவிலியவிரோதம்*, மேற்படி நூலுக்குக் கொடுத்த விபரங்கள் இதற்கும் பொருந்தும்.

.................., *கட்டளைக்கலித்துறை*, கையெழுத்துப் பிரதியாகக் கட்டுரையாளர் கைவசமுள்ளது.

தாமோதரம், சி.வை., *தாமோதரம்பிள்ளை எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு*, கூட்டுறவுத் தமிழ் நூல் விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1971. மீள்பதிப்பு: குமரன் புத்தக இல்லம், 2006.

நடராசா, எவ்.எக்ஸ்.சி., *ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு*. குமரன் புத்தக இல்லம், கொழும்பு 2002.

நமசிவாயம்,ச. 'பிள்ளையும் ஐயரும்', *ஈழகேசரி*, 11-03-1945.

பூலோகசிங்கம், பொ., *தமிழிலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள்*, குமரன் புத்தக இல்லம், 2001.

.................., 'சைவப் பெரியார் சி.வை.தாமோதரம்பிள்ளை' தொடர்கட்டுரை, *தினகரன்*, 4,11, 18-9-1977.

மனோன்மணி சண்முகதாஸ், 'ஈழம் தந்த இரு பிள்ளைகள்', *ஈழநாடு*, 21-11-1976.

மீனாட்சி சுந்தரம்பிள்ளை, 'குருபரம்பரையகவல்', *செந்தமிழ்ச் செல்வி*, தொகுதி–3.

முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, கு., *குமாரசுவாமிப் புலவர் வரலாறு*, புலவரகம் வெளியீடு, சுன்னாகம், 1970.

.................., 'சபாபதி நாவலர் கண்ட சி.வை.தா.', *ஈழநாடு வாரமலர்*, 19-12-1976.

.................., *பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தின் முக்கியபோக்குகள்*, ஐக்கியதீபத் தொடர் கட்டுரையின் மறுபிரசுரம், யாழ்ப்பாணம், 1978.

.................., (தொகுப்பாசிரியர்), *இராவ்பகதூர் சி.வை தாமோதரம்பிள்ளை கவி திரட்டு*, இலங்கை, 1974.

................., 'தமிழகத்தை ஈழநாட்டுக்குக் கடமைப்படுத்திய பேருபகாரி நாவலர்', *நாவலர் மாநாடு விழா மலர்*, 1969.

வேலுப்பிள்ளை, ஆ., *தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும்*. பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1978 (இரண்டாம் பதிப்பு), மீள்பதிப்பு: குமரன் புத்தக இல்லம், 2006.

வையாபுரிப்பிள்ளை, எஸ்., *தமிழ்ச்சுடர்மணிகள்*, பாரதி நிலையம், சென்னை, 1968.

**Katre, S.M., *Introduction to Indian Textual Criticism*, Poona, 1954.**

**Muttucumarasamy, V., *C.W.Thamotharampillai*, Uma Siva Pathipakam, Jaffna, 1971.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of ...
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

649013

குமரன் புத்தக இல்லம்

ISBN 978-955-659-088-9

9789556590883

விலை ரூ 150.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org